விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 24
ஒலி 281 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 09 செவ்வாய்க்கிழமை (26.09.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= வருடமொ

தமிழர்களுக்காக தனது உயிரை ஆகுதியாக்கிய

தியாக தீபம் திலீபன்

# நினைவேந்தலின் இறுதி நாள் இன்று



## தாயகத்திலும் புலத்திலும் அஞ்சலிக்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

**தமிழ் மக்களின் விடிவுக்காக தனது உயிரை ஆகுதி யாக்கிய தியாகி திலீபனின் 36ஆவது ஆண்டு நினை வேந்தலின் இறுதிநாள் நிகழ்வுகள் இன்று உணர் வெழுச்சியுடன் முன்னெடுக்கப்படவுள்ளது.**

1987ஆம் ஆண்டு செப் ரெம்பர் மாதம் 15ஆம் திகதி 5 அம்சக்கோரிக்கையை இந்திய அரசாங்கத்திடம் முன்வைத்து தனது அகிம் சைப் போராட்டத்தை திலீபன் ஆரம்பித்தார்.


நல்லூர் முன்றலில் நீரா காரம் அருந்தாமல் உண்ணா விரதப் போராட்டத்தை ஆரம் பித்த திலீபன் 26.09.1987ஆம் ஆண்டு தனது உயிரை தமிழ் மக்களுக்காக ஈந்தளித்தார்.

திலீபன் அஞ்சலி நிகழ்வை தியாக தீபம் திலீபன் நினை வேந்தல் ஏற்பாட்டுக்குழு ஏற் பாடு செய்துள்ளது.

அதன்படி அதன் 15


தியாக தீபம் திலீபனின்

## எழுச்சி ஊர்திப் பயணம்



15

## நினைவேந்தலை நடத்த தமிழர்களுக்கு உரிமையுண்டு



### நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ

(கொழும்பு)

தியாகி திலீபனின் நினைவேந்தலை நடத்த தமிழர்களுக்கு உரிமையுண்டு என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

(03ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் இறைமை, கௌரவத்தை சீனா எப்போதும் பாதுகாக்கும்

### இலங்கைக்கான சீனத் தூதுவர்

(கொழும்பு)

இலங்கையின் இறைமை, கௌரவத்தை பாதுகாப்ப தற்கு எப்போதும் சீனா ஆதர வளிக்கும் என இலங்கைக் கான சீனத் தூதுவர் ஹீ சென் ஹொங் தெரிவித்துள்ளார்.

ஹன்வெல ராஜசிங்க கல் லூரியில் இடம்பெற்ற நிகழ் வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்

அவர் மேலும் குறிப்பிட் டுள்ளதாவது

இலங்கையும் 15

## தேர்தலை பிற்போட அனுமதிக்க முடியாது

### ஜே.வி.பி தலைவர் அநுர

(கொழும்பு)

தேர்தலைபிற்போட்டு தேசிய மக்கள் சக்தியின் வளர்ச்சியை இடைநிறுத்த முடியாது என தேசிய மக்கள் சக்தியின் தலை வர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஊவா பரணகமவில் இடம் பெற்ற நிகழ்வொன் றில் உரையாற்றும் 15

முல்லையில் புலிகளின்

## ஆயுதங்கள், தங்கம் தேடி அகழ்வுப் பணி

(முல்லைத்தீவு)

விடுதலைப் புலிகளால் புதைக்கப்பட்ட ஆயுதங்கள், தங்க நகைகள் இருப்பதாக தெரிவித்து முள்ளிவாய்க்கால் மேற்கு பகுதியில் நேற்று பிற் பகல் ஆரம்பமாகிய அகழ்வு பணியானது மாலையுடன் நிறுத்தப்பட்டிருந்தது.

நேற்றைய அகழ்வு 15

## ஐ.எம்.எப் பிரதிநிதிகள் - ரணில் இன்று கலந்துரையாடல்

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய் துள்ள சர்வதேச நாணய நிதி யத்தின் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற் 15

## யாழில் விபரீதமுடிவெடுத்த இளம் பெண் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழில் விபரீத முடிவெ டுத்த இளம் பெண் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.


இதில் சண்டிலிப்பாய், மாகி யப்பிட்டி பகுதியைச் சேர்ந்த ஜெயக்குமார் டானுகா (வயது-23) என்ற யுவதியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவரது தாயார் முள்ளி வாய்க்கால் இறுதி யுத்தத்தில் உயிரிழந்துள்ளார்.

இந் நிலையில் தந்தை இரண்டாவது 02

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 75வது இனிய பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள்




## பொன். கனகரத்தினம்

(முன்னாள் வலி.தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர், சமாதான நீதவான்)

**26.09.2023**

வாழ்த்துவோர்
மனைவி, பிள்ளைகள், சகோதரிகள், மருமக்கள், மருமகள்கள், மக்கள், பேரப்பிள்ளைகள்

(17235)

# மரண அறிவித்தல்



## திருமதி தங்கச்சிப்பிள்ளை முத்துலிங்கம்

மண்டைதீவு 8-ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 70,இராஜேஸ்வரி வீதி, நாயன்மார்கட்டை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கச்சிப்பிள்ளை முத்துலிங்கம் அவர்கள் 25.09.2023 திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை முத்துலிங்கம் அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற ஆறுமுகம் பொன்னம்மா அவர்களின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை நாகமுத்து அவர்களின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான வள்ளியம்மை,சிவகுருநாதன், சின்னத்துரை மற்றும் சின்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சபாரத்தினம் மற்றும் கனகம்மா,தெய்வநாயகி காலஞ்சென்ற பிரபலசிங்கம் ஆகியோரின் மைத்துனியும் நவநீதரம்பை,இராஜகோபால் (நிர்வாக உத்தியோகத்தர் - பிரதி பிரதம செயலாளர் அலுவலகம், வடக்கு மாகாண சபை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற சிவராசா மற்றும் சிவசோதி ஆகியோரின் அன்பு மாமியும் சிந்துர்ஜன்,நிரூபனா, சதுமிதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை **(26.09.2023)** அன்று அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தொடர்பு**
**076 162 0387**

(C-7329)

**தகவல்**
**குடும்பத்தினர்**

## பாரிய கொள்ளை

(கொழும்பு)

மீகொடை பிரதேசத்தில் உள்ள தளபாட மொத்த விற்பனை நிலையமொன்றில் ஆயுதங்களுடன் பிரவேசித்த இருவர் பணத்தை கொள்ளையிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

சுமார் 80 இலட்சம் ரூபாவை கொள்ளையடித்து இவ்வாறு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நேற்று மாலை மோட்டார் சைக்கிளில் பிரவேசித்த இருவர் ஆயுதங்களுடன் விற்பனை நிலையத்திற்குள் நுழைந்து உயிர் அச்சுறுத்தல் விடுத்து இந்தக் கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மீகொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## யாழில்...

திருமணம் செய்த நிலையில் சித்தியுடனே இவர் வசித்து வந்துள்ளார்.

இந்நிலையில் கடந்த 6ஆம் மாதம் அவரது மாமா உயிரிழந்துள்ளார்.


இந்நிலையில் அவரது 90வது நாள் சடங்கிற்கு சென்றுவிட்டு வீட்டிற்கு வந்து மனவிரக்தியுடன் காணப்பட்டார்.

இந்நிலையில் அவர் நேற்றுக் காலை தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7,104)

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் பழனி சிறிதரன்



தோற்றம் 30.09.1964 | மறைவு 26.09.2022

எத்தனையோ உறவு இருந்தும் அத்தனையும்
கூட வருமா?
உங்களைப் போல காவல் தெய்வம் இனிமேலும்
கிடைத்திடுமா?
ஆலமரமே இங்கு வேரோடு சாய்ந்ததே;
– தலையெழுத்தின்
உயிர் எழுத்தும் அழிந்து போனதே.
எங்கள் உலகமே இருளுதே அப்பா...
நெஞ்சத்தில் நினைவாய், நிலையாய் என்றும்
எங்களோடு எங்களின் இறைவனாய் – என்றும்
எங்களை வழிநடத்த வணங்குகிறோம்.

கல்லடி, தும்பளை வீதி,
பருத்தித்துறை.

(C-7327)

நீங்கா நினைவில்...
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியால்
# செலுத்த வேண்டிய கடன்தொகை அதிகரிப்பு
## நிதி இராஜாங்க அமைச்சர்



**(கொழும்பு)**

**டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்ததன் விளைவாக இலங்கை செலுத்த வேண்டிய கடனின் மொத்தத் தொகை கணிசமாக அதிகரித்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.**

ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி அடைந்தமையானது கடன் நெருக்கடிக்கான பிரதான காரணங்களில் ஒன்றாகும் என்றும் கடந்த ஆண்டு ஏற்பட்ட நெருக்கடியைத் தொடர்ந்து, கடனை திருப்பிச் செலுத்தக் கூடிய சூழலை உருவாக்குவதில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் சர்வதேச நாணய நிதியம் போன்ற சர்வதேச அமைப்புகளின் நம்பிக்கையை வென்றெடுத்துள்ள நிலையில் அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிக்க சர்வதேச நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் மேலும் முன்னைய ஒப்பந்தங்களை இலங்கை மதிக்காத காரணத்தினால் சர்வதேச நாணய நிதியம் கடுமையான நிபந்தனைகளை விதித்துள்ள போதும் சவால்களுக்கு மத்தியில் அரசாங்கம் கணிசமான முன்னேற்றத்தை அடைந்துள்ளது என அமைச்சர் தெரிவித்தார். (5-6)

## கொக்ஹெயினுடன் கென்ய பிரஜை கைது



(கொழும்பு)

கொக்ஹெய்ன் போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் கென்ய பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகள் மேற்கொண்ட சோதனையின் போது குறித்த நபரிடமிருந்து 4 கிலோ நிறையுடைய கொக்ஹெய்ன் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் குறித்த கொக்ஹெய்ன் 30 கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுடையது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (5-6)

# 1.5 மில்லியன் முட்டைகள் மாலைதீவுக்கு ஏற்றுமதி
## மஹிந்த அமரவீர

(கொழும்பு)

இலங்கையிலிருந்து மாலைதீவுக்கு மாதாந்தம் 1.5 மில்லியன் முட்டைகள் ஏற்றுமதி செய்யப்படுவதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

கன்னோருவை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்கள அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர், ஊடகங்களுக்கு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த ஆண்டுக்குள் மேலும் 4 நாடுகளுக்கு முட்டைகளை ஏற்றுமதி செய்ய பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் முட்டை உற்பத்தியை அதிகரித்து, நாட்டில் முட்டையின் விலை குறைவடையும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் விவசாய அமைச்சர் தெரிவித்தார். (5-6)

## திலீபனின் நினைவேந்தலால்
# இனமோதல் உருவாகும் என சிங்கள மக்களிடையே பரப்ப வேண்டாம்
## நீதி அமைச்சர்

(கொழும்பு)

இலங்கையில் ஜனநாயக வழியில் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்த மூவின மக்களுக்கும் உரிமை உண்டு என்றும் அதைத் தடுத்து நிறுத்துவது அடிப் படை உரிமை மீறல் என்றும் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளை மீளுருவாக்கம் செய்து மீண்டும் ஒரு போரை தமிழ் மக்கள் விரு ம்பாத நிலையில் அவர்கள் தமது அன்புக்குரியவர்களை அமைதியாக நினைவு கூர்வதற்கு இடமளிக்க வேண்டும்.

மேலும் கடந்த நல்லாட்சிக் காலத்தில் வடக்கு-கிழக்கு மக்கள் அமை தியான முறையில் நினை வேந்தல் நிகழ்வுகளை நட த்திய நிலையில், திலீபன் நினைவேந்தல் நிகழ்வால் இன மோதல் ஏற்படும் என தவறான கருத்தை சிங்கள மக்கள் மத்தியில் எவரும் பரப்பக்கூடாது என்றும் அவர் தெரிவித்தார். (5-6)


# சேவைநலன் பாராட்டு

## திரு.நமச்சிவாயம் இரவிக்குமார்

(கணித விஞ்ஞான பயிற்சி, கல்விமாணி (BED))

பாடசாலைக் கல்வி-சரசாலை சரஸ்வதி வித்தியாலயம் (வகுப்பு-1-5)

சாவகச்சேரி இந்துக் கல்லூரி (வகுப்பு 5- உயர்தரம்)



### சேவை விபரம்

யா/சரசாலை சிறி கணேச வித்தியாலயம் –ஆசிரியர்

17.08.1988–21.07.1993

யா/வரணி ம.வி.– ஆசிரியர்

22.07.1993–23.01.1994

கோட்டக் கல்வி அலுவலகம்–திட்டமிடல் உதவியாளர்–

24.01.1994–01.01.1995

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி – ஆசிரியர், பகுதித் தலைவர்–

02.01.1995–04.04.2018

யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி – ஆசிரியர் , பகுதித் தலைவர்–

05.04.2018–26.09.2023

கணித, விஞ்ஞான ஆசானாக பகுதித்தலைவராக 35 வருட கல்விச் சேவையாற்றி பல தலைமுறை மாணவர்களின் நன்மதிப்பைப் பெற்று ஓய்வு பெறும் ஆசானை பாராட்டி வாழ்த்துவதுடன் ஓய்வுக்காலம் சிறக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆசிரியர் கழகம்.

Best Wishes

(நி-7307)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸி அணியை 99 ரன்களால் வெற்றி கொண்ட இந்தியா



இந்தியா, அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான 2 ஆவது ஒருநாள் போட்டி இந்தூரில் நேற்று முன்தினம் நடைபெற்றது. டாஸ் வென்ற அவுஸ்திரேலியா அணி கப்டன் ஸ்மித் பந்து வீச்சை தேர்வு செய்தார்.

தொடக்க ஆட்டக்காரர்களாக ருதுராஜ் கெயிக்வாட், சுப்மன் கில் களமிறங்கினர்.

இந்திய அணி 9.5 ஓவரில் ஒரு விக்கெட் இழப்புக்கு 79 ரன்கள் எடுத்திருந்த நிலையில் மழை பெய்ததால் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

ஷ்ரேயஸ் அய்யர் 86 பந்துகளில் 3 சிக்சர், 10 பவுண்டரிகள் உட்பட சதமடித்தார். அவர் 105 ரன்னில் அவுட்டானார். இது இவரது 3 ஆவது ஒருநாள் சதமாகும். சுப்மன் கில் 92 பந்துகளில் 4 சிக்சர், 6 பவுண்டரி உட்பட சதமடித்து அசத்தினார். அவர் 104 ரன்னில் ஆட்டமிழந்தார். 2 ஆவது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த இவர்கள் 200 ரன்கள் குவித்தனர்.

தொடர்ந்து ஆடிய கப்டன் கே.எல்.ராகுல், சூர்யகுமார் யாதவ் ஜோடியில் சிக்சர், பவுண்டரிகளாக அடித்தனர். ராகுல் அரை சதமடித்து 52 ரன்னில் அவுட்டானார். கேமரூன் கிரீன் வீசிய 43 ஆவது ஓவரில் சூர்யகுமார் யாதவ் தொடர்ந்து 4 சிக்சர்கள் அடித்து அசத்தினார்.

இறுதியில், இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 399 ரன்களை குவித்தது. இதையடுத்து, 400 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் அவுஸ்திரேலியா அணி களமிறங்கியது. இதில் தொடக்க வீரர் மேதிவ் ஷாட் 9 ரன்னிலும் கப்டன் ஸ்டீவ் ஸ்மித் ரன் எடுக்காமலும் ஆட்டமிழந்தனர். அவுஸ்திரேலிய அணி 9 ஓவரில் 2 விக்கெட் இழப்பிற்கு 56 ரன்கள் எடுத்திருந்தபோது மழை குறுக்கிட்டது. இதனால் ஆட்டம் பாதிக்கப்பட்டது.

பின்னர் மழை நின்ற நிலையில் ஆட்டம் மீண்டும் தொடங்கியது.

அவுஸ்திரேலியாவுக்கு 33 ஓவரில் 317 ரன்கள் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டது. இதையடுத்து அவுஸ்திரேலியா அணி 28.2 ஓவருக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 217 ரன்கள் மட்டுமே எடுக்க முடிந்தது. அவுஸ்திரேலியா அணியை 99 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி இந்தியா தொடரை கைப்பற்றியது. (5-6)

# சோதியின் சுழற்பந்து வீச்சில் சிக்குண்ட வங்கப் புலிகள்



டாக்காவில் நடந்த 2 ஆவது ஒருநாள் போட்டியில் நியூசிலாந்து அணி 86 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வங்கதேசத்தை வீழ்த்தியது.

நியூசிலாந்து அணி வங்கதேசத்தில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. முதல் ஒருநாள் போட்டி மழையால் கைவிடப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் இரண்டாவது போட்டி டாக்காவில் நடந்தது. நாணய சுழற்சியில் வென்ற நியூசிலாந்து முதலில் துடுப்பாடியது. முஸ்தபிஸூர், காலித் அகமது மிரட்டல் பந்து வீச்சில் 36 ஓட்டங்களுக்குள் நியூசிலாந்து 3 விக்கெட்டுகளை பறிகொடுத்தது.

அதன் பின்னர் ஹென்றி நிக்கோல்ஸ் மற்றும் டாம் பிளெண்டெல் இருவரும் கைகோர்த்தனர். 49 ஓட்டங்கள் சேர்த்த நிக்கோல்ஸ் விக்கெட் கீப்பர் லித்தன் தாஸிடம் கேட்ச் கொடுத்து வெளியேறினார்.

இறுதி நியூசிலாந்து அணி 49.2 ஓவரில் 254 ஓட்டங்களுக்கு ஒல்அவுட் ஆனது. காலித் அகமது, மஹெடி ஹசன் தலா 3 விக்கெட்டுகளும் முஸ்தபிஸூர் 2 விக்கெட்டுகளும் கைப்பற்றினர்.

அதனைத் தொடர்ந்து களமிறங்கிய வங்கதேச அணியில் தமிம் இக்பால் நிலைத்து நின்று ஆட, ஏனைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.


அணியின் ஸ்கோர் 92 ஆக இருந்தபோது தமிம் இக்பாலை 44 ஓட்டங்களில் சோதி வெளியேற்றினார். அதன் பின்னர் சோதியின் மாயஜால சுழலில் வங்கதேச வீரர்கள் ஆட்டமிழந்தனர். மஹ்முதுல்லா மட்டும் 49 ஓட்டங்கள் எடுக்க வங்கதேச அணி 41.1 ஓவரில் 168 ஓட்டங்களுக்கு சுருண்டது. சோதி 6 விக்கெட்டுகளும் ஜேமிசன் 2 விக்கெட்டுகளும் வீழ்த்தினர்.(5-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2923

தியாகு





சாமந்தி




வினுஜன்




மிதுனா




சிந்து




சரண்யா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பன்னிரு திருமுறைகளை உலகெங்கும் எடுத்துச் செல்லும் பணியினை மேற்கொண்ட இலங்கை சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தனை தமிழக ஆளுநர் ரவி தலைமையில் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை இந்தியாவில் இடம்பெற்றது.

## தனுஷ்கோடியில் தஞ்சமடைந்த இரண்டு இலங்கையர்கள்

(இராமேஸ்வரம்)

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக பல்வேறு தரப்பினரும் நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர். இவ்வாறானதொரு நிலையில் இலங்கையில் வாழ முடியாதென இருவர் நேற்று மன்னாரில் இருந்து படகு மூலம் புறப்பட்டுதனுஷ் கோடிக்கரையில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர்.

இது குறித்து தகவல் அறிந்த ராமேஸ்வரம் மரைன் பொலிஸார் அவர்களை இராமேஸ்வரம் மரைன் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.(5-6)


# 2ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 17 - 07 - 1937



மறைவு 17 - 10 - 2021

அமரர். இராசம்மா இராமலிங்கம்

திதி-புரட்டாதி பூர்வபக்க துவாதசி 26.09.2023

எங்கள் அன்பு அம்மாவே,
இவ்வுலகை விட்டு நீங்கள் இறையடி சேர்ந்தது
இன்று போல் இருக்குதம்மா, ஆனாலும்
இரண்டு வருடங்கள் உருண்டோடி விட்டதம்மா
எத்தனை ஆண்டுகள் ஒடிச் சென்றாலும்
உங்கள் பிரிவுத்துயர் மாறாதம்மா
கண்ணுக்குள் எமை வைத்துக் காத்த தாயே
கண்ணீரோடு உங்களைத் துதிக்கின்றோம்
இறையடியில் நீங்கள் முத்திபெற
இங்கிருந்து பிரார்த்திக்கும் உங்கள் குடும்பத்தினர்.
ஒம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

(இ)

ஈவினை, புன்னாலைக்கட்டுவன். குடும்பத்தினர்.



# JAFFNA EDUCATION EXAM CENTRE

## தரம் 05 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சை வழிகாட்டல் செயலமர்வு- 2023

இறுதிப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெறுவதற்கான ஓர் அரிய சந்தர்ப்பம்

விசேட பரீட்சையும் இலகுவாக அதிகூடிய புள்ளிகளைப் பெறுவதற்கான நுட்பங்களும்

யாழ்ப்பாணத்தின் முன்னணி வளவாளர்களினால் வழிகாட்டப்படும்.
செயலமர்வில் வழங்கப்படும் முதலாவது வினாப்பத்திரத்தில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் மாணவர்களுக்கு

**பத்தாயிரம் ரூபாய்க்கு மேற்பட்ட பணப் பரிசுகளும் வழங்கப்படும்.**

**இடம் - தந்தை செல்வா கலையரங்கு (யாழ்.மத்திய கல்லூரி)**
**காலம் - 28.09.2023 (வியாழக்கிழமை)**
**நேரம் - மு.ப. 8.30 முதல் பி.ப 1.00 வரை**

இடவசதியைக் கருத்திற்கொண்டு
**முற்பதிவு செய்பவர்கள் மட்டுமே பங்குபற்ற முடியும்.**
பதிவுகளை மேற்கொள்ள கீழே உள்ள தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

(இ)

**074 181 9705/ 076 475 4163/ 075 447 5302**


# இராசிபலன்

26.09.2023
புரட்டாதி 09,செவ்வாய்க்கிழமை
துவாதசி முன்னிரவு 11.30 மணிவரை

திருவோணம் முற்பகல் 7.42 மணிவரை
சுபநேரம் -10.32-12.02 மணிவரை
இராகுகாலம்-3.02-4.32 மணிவரை

சந்திராஷ்டமம்- புனர்பூசம்.

வளவன்

**மேஷம்** வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**ரிஷபம்** குடும்பத்தில் நிலவி வந்த குழப்பங்கள் அகலும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள்.

**மிதுனம்** எந்தக் காரியத்தையும் நிதானத்துடன் செய்வது நல்லது, அரசு சம்பந்தப்பட்ட வகையில் தாமதங்கள் ஏற்படலாம், வரவைக் காட்டிலும் செலவு கூடலாம்.

**கடகம்** தொழிலில் மேலதிகாரி ஆதரவைப் பெறுவீர்கள், நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் நெருங்கிய நட்பு கிடைக்கலாம், புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் உருவாகும்.

**சிம்மம்** சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, தொழில் போட்டிகள் மாறும், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு.

**கன்னி** மனநிறைவு கூடும் நாள், நீண்ட நாட்களாக தள்ளிப் போட்டு வந்த காரியம் ஒன்றை இன்று திடீரென செய்து முடிப்பீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.

**துலாம்** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வாகன சுகமுண்டு, செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்** பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள்

**தனுசு** செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், எதிர்பாராத தன வரவுகள் வந்து சேரலாம், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும்.

**மகரம்** ஆரம்பத்தில் அச்சுறுத்தலாகத் தோன்றிய தகவல் முடிவில் ஆதாயத்தைக் கொடுக்கலாம், பொதுநலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**கும்பம்** சாப்பிடக் கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்வீர்கள், உறவினர்கள் வருகையால் திடீர்ச் செலவுகள் ஏற்படும் நாள், சயனசுகக் குறைவான நாள்.

**மீனம்** நீண்ட நாளைய ஆசைகள் நிறைவேறலாம், வருமானம் அதிகரிக்கும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் குதூகலமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

உத்தமமான மனைவி கணவனுக்கு ஒரு கிரீடம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்.பல்கலையில் உளச்சார்பு பரீட்சைகளுக்கான விண்ணப்பம் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் குறிப்பிட்ட சில கற்கை நெறிகளுக்கு மாண வர்களைத் தெரிவு செய்வதற்காக நடத்தப்படும் சகல உளச்சார்புப் பரீட்சைகளுக்கும் விண்ணப்பிப்பதற்கான முடிவுத் திகதி இம்மாதம் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டு இடம் பெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பல்கலைக் கழக அனுமதித் தேவை களைப் பூர்த்தி செய்த மாண வர்களுள் குறிப்பிட்ட கற்கை நெறிகளுக்கான விசேட தகுதி களைக் கொண்டிருக்கும் மாண வர்களிடமிருந்து விண்ணப் பங்கள் கோரப்பட்டிருந்தன. அவற்றுக்கான முடிவுத் திகதி கடந்த 21 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் மாணவர்கள் பலரது வேண்டுகோளுக் கிணங்க தகுதியான விண் ணப்பதாரிகளிடமிருந்து விண் ணப்பங்கள் எதிர்வரும் 30.09.2023 ஆம் திகதி சனிக்கிழமை மதியம் 12 மணிவரை ஏற்றுக்கொள் ளப்படும் என்றும், மேலதிக விபரங்களை www.jfn.ac.lk என்ற இணையத்தள த்தில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் பல்கலைக்கழகப் பதிவாளர் அறிவித்துள்ளார். (5-6-33)

# கஞ்சாவுடன் ஒருவர் கைது

(அராலி)

காரைநகர் - ஊரி பகுதியில் 12 கிலோ 340 கிராம் எடை யுடைய கேரளக் கஞ்சாவுடன் சந்தேகநபர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டு ள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடி ப்படையினர் இந்த கைது நட வடிக்கையை முன்னெடுத்திரு ந்தனர். இதன்போது ஊர்கா வற்றுறை பகுதியைச் சேர்ந்த 44 வயதுடைய சந்தேகநபர் ஒருவரே கஞ்சாவை மோட்டார் சைக்கிளில் கொண்டு சென்ற வேளை இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் பாரப் படுத்தப்பட்டுள்ளார். சந்தேக நபரை ஊர்காவற்றுறை நீதி மன்றத்தில் முற்படுத்துவதற் கான நடவடிக்கைகளை பொலி ஸார் முன்னெடுத்துள்ள னர். (5-6-104)

# வாகன வருமான வரிப் பத்திரம் வழங்கும் புதிய நடைமுறை

(யாழ்ப்பாணம்)

வாகன வருமான வரிப் பத்திரம் வழங்கும் புதிய நடைமுறை (இ.ஆர்.எல் 20) எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 3 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் பரீட்சார்த்தமாக நடைமுறைப் படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக பொதுமக் களுக்கு அறிவுறுத்தப்பட்டு ள்ளது.

நேற்று முன்தினம் நள் ளிரவு 12 மணியுடன் இணைய வழி (இ. ஆர். எல் 1.0 ஊடாக) வாகன வருமான வரி அனு மதிப்பத்திரம் பெறும் முறை தற்காலிகமாக நிறுத்திக் கொள் ளப்பட்டு மீண்டும் ஒக்டோபர் மாதம் 6 ஆம் திகதி முதல் வழமைக்கு திரும்பும்.

கருமபீடங்களூடாக வாகன சகல செயற்பாடுகளும் செப் டெம்பர் இன்று பிற்பகல் 3 மணியுடன் தற்காலிகமாக நிறு த்திக்கொள்ளப்படும்.

இதன்படி நாளை 27ஆம் திகதி முதல் ஒக்டோபர் 2ஆம் திகதி வரை நாடளாவிய ரீதி யில் வாகன வருமானவரி அனுமதிப்பத்திரம் விநியோ கிக்கும் செயன்முறை நடை முறைப்படுத்தப்பட மாட்டாது.

மேலும் பொது மக்களின் நலன்கருதி நாளை தொடக்கம் ஒக்டோபர் 6 ஆம் திகதி வரையான இடைப்பட்ட காலப்பகுதியில் முடிவடையும் வாகன வருமான வரி அனு மதிப் பத்திரங்களுக்கான தண் டப்பணம் அறவிடப்படுவதி லிருந்து விலக்களிக்கப்பட்டு ள்ளது.

பின்னர் மீண்டும் வாகன வருமான வரி வழங்கும் செயற்பாடானது ( இ.ஆர்.எல் 2.0 செயற்றிட்டம் ஊடாக) ஒக்டோபர் 3 ஆம் திகதி பரீட் சார்த்தமாக ஆரம்பிக்கப்படும். இப் பரீட்சார்த்த காலப்பகுதி முடிவடையும் வரை வடக்கு மாகாணத்திற்குட்பட்ட வாகன வருமானவரி அனுமதிப் பத்திரம் மட்டுமே வழங்கப்படும் என்பதுடன் ஏனைய மாகா ணங்களுக்கான வாகன வரு மான வரி அனுமதிப் பத்திரம் வழங்கப்படும் செயற்பாடானது பின்னர் நாடளாவிய ரீதியில் அறிவிக்கப்பட்டு ஆரம்பிக்கப் படும் என்பதுடன் வட மாகாண வாகனப் போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் திருமதி. சி. சுஜீவா அறிவித்து ள்ளார். (5-6)

# யாழ்ப்பாண தென்மோடிக் கூத்து ஓராள் ஆற்றுகைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்ற த்தின் ஏற்பாட்டில் மரபுவழி ஆற்றுகையாளரை ஊக்கப் படுத்தவும் நலிந்து செல்லும் கூத்துமரபுக்கு புத்துயிர் கொடுக்கவும் "யாழ்ப்பாண தென்மோடிக் கூத்து ஓராள் ஆற்றுகைப் போட்டி" அடு த்த மாத த்தில் நடத்த ப்படவுள்ளது.

மூன்று பிரிவுகளாக நட த்தப்படவுள்ள இப் போட் டியில் முதலாம்,இரண்டாம் பிரிவுகள் பாடசாலை மாண வர்களுக்கா கவும், மூன் றாம் பிரிவு திறந்த போட்டி யாகவும் அமையவுள் ளது. இப் போட்டிக்கான விண் ணப்பங்கள் தற்போது கோரப்பட்டுள்ளன.

ஒருவரே தனி ஆற் றுகையாளராக பங்கேற்கும் இப் போட்டியில் யாழ்ப் பாணம், கிளிநொச்சி, முல் லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் பங்குபற்ற முடியும். போட்டியாளர்கள் சுயமாகத் தயாரித்த விண் ணப்பப் படிவத்தை எதிர் வரும் 05.10.2023 வியா ழக்கிழமைக்கு முன்பாக, "யாழ்ப்பாண தென்மோடிக் கூத்து ஓராள் ஆற்றுகைப் போட்டி" எனக் குறிப்பிட்டு திருமறைக் கலாமன்றம், இல.238, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு நேரடியாக ஒப் படைக்கலாம் அல்லது தபால் மூலமாக அனுப்பி வைக் கலாம். மேலும் 077 402 8031, 077 669 2657 என்னும் தொலைபேசி இலக்கங்களுக்கு வட்ஸ் அப் மூலமாகவும் அனுப்பி வைக்கமுடியும். (5-6)

# குடவத்தை பகுதியில் வாளுடன் நபரொருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - நெல்லி யடி குடவத்தை பகுதியில் வாள் ஒன்றை உடை மையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் நேற்று முன்தினம் ஞாயி ற்றுக்கிழமை கைது செய் யப்பட்டுள்ளார்.

குடவத்தை பிரதேசத் தைச் சேர்ந்த 21 வயது டைய இளைஞரே நெல் லியடி பொலிஸா ரினால் கைது செய்யப்பட்டார். சந் தேக நபரை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ள னர். (5-6-33)



வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் உடல், உள மேம்பாட்டிற்காக இலவசமாக நடத்த ப்பட்டு வருகின்ற யோகக்கலைக் கற்கை நெறியின் புதிய பிரிவு நல்லூர்க் கந்தன் ஆலயத்தின் பின் வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை அதன் பயிற்சிப் பிரிவின் இணைப்பாளர் வ.யோகநாதன் தலைமையில் இடம் பெற்றது. (படம்- சிவசாந்தன்)

# சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடிய சஜித்

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத் தின் நீடிக்கப்பட்ட கடன் வசதி களின் கீழ் மேற்கொள்ளப்படும் மீளாய்வு கலந்துரையாடலின் முதலாவது மீளாய்வின் இறு திக் கலந்துரையாடலின் நிமி ர்த்தம் சர்வதேச நாணய நிதி யத்தின் பிரதிநிதிகள், எதிர் க்கட்சித் தலைவர் சஜித் பிரே மதாஸவை நேற்று சந்தித்துக் கலந்துரையாடினர்.

எதிர்க்கட்சித் தலைவர் அலு வலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் பொருளாதார, சமூக, அரசியல் விடயங்கள் தொட ர்பில் கலந்துரையாடப்பட்டன.

மேலும் சர்வதேச நாணய நிதியத்துடன் தற்போதைய அரசு செய்து கொண்டுள்ள ஒப் பந்தம் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டதுடன் அரசு உள் நாட்டுக் கடனை மறுசீரமைப்ப தன் மூலம் உழைக்கும் மக்க



ளின் ஊழியர் சேமலாப நிதிய மிகுதியில் ஏற்படுத்தியுள்ள பாதிப்பு குறித்தும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஐ.எம்.எப். பிரதிநிதிகளிடம் தெளிவுபடுத்தினார்.

இந்தச் சந்திப்பில் சர்வதேச நாணய நிதியத்தைப் பிரதி நிதித்துவப்படுத்தும் பிரதிநிதி கள் கலந்துகொண்டிருந் தனர்.மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான கலாநிதி ஹர்ஷ டி சில்வா, கபீர் ஹாசிம், பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், எம்.வேலுகுமார் மற்றும் ஹர் ஷன ராஜகருணா ஆகியோ ரும் இதில் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-6)

# சுகாதார அமைச்சுக்கு எதிராக தாதியர் சங்கம் இன்று போராட்டம்

(கொழும்பு)

சுகாதார அமைச்சுக்கு எதி ராக இன்று பாரிய ஆர்ப்பாட்ட மொன்றை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளதாக அகில இலங்கை தாதியர் சங்கம் தெரி வித்துள்ளது. "தாதியர் பற்றாக் குறையினால் வைத்தியசா லைகளில் ஏற்பட்டுள்ள நெருக் கடியைத் தீர்க்க நடவடிக்கை எடுக்காத அதிகாரிகள் தாதியர் அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பான வரைவை இர கசியமாகத் தயாரித்துள்ள தாகத்" தெரிவித்தே இப் போரா ட்டம் முன்னெடுக்கப்படவுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நாட்டில் நிலவும் பொருளாதார நெருக் கடியைக் கருத்திற்கொண்டு நாட்டின் சுகாதார அமைப்பில் காணப்படும் குறைபாடுகளைச் சரி செய்வதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகச் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள் ளமை குறிப்பிடத்தக்கது.(5-6)

# சேனநாயக்கவுக்கு பயணத்தடை விதிப்பு

(கொழும்பு)

ஆட்ட நிர்ணய குற்றச் சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டி ருந்த கிரிக்கெட் வீரர் சசித்ர சேனநாயக்கவை பிணையில் விடுவிக்க கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் நேற்று திங் கட்கிழமை உத்தரவிட்டுள்ளது.

விசாரணைக் காலப் பகுதி யில் சந்தேகநபர் சாட்சிகளுக்கு செல்வாக்கு செலுத்தியதாக தெரியவராததால் பிணையில் விடுவிக்கப்படுவதாக நீதிவான் குறிப்பிட்டுள்ளார். மேலும் சசித்ர சேனநாயக்கவின் வெளிநாட்டு பயணத்தை தடை செய்து நீதி மன்றம் மற்றுமொரு உத்தரவை பிறப்பித்துள்ளது. (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திலீபன் தியாகத்தின் உன்னதம்



திலீபன் உலக வரலாற்றில் உயர்ந்து நிற்கும் ஓர் உன்னத தியாகி. தியாகம் என்றால் என்ன? அறவழிப் போரின் உச்சம் எவ்வாறு இருக்கும் என்பதை இந்த வையகத்திற்கு கற்பித்து காற்றோடு காற்றாய் கரைந்து போனவன் திலீபன்.

திலீபனின் தியாகத்தை இந்த உலகமே அண்ணார்ந்து பார்த்து வியந்து நிற்கிறது. ஆயினும் அவனின் தியாகத்தின் தீ இன்றுவரை எரிந்து கொண்டுதான் இருக்கிறது.

ஈழத் தமிழினத்துக்காக நீர் கூட அருந்தாது நல்லூர் முன்றலில் பன்னிரண்டு நாட்களாய் பட்டினி கிடந்து தனது இன்னுயிரை ஈகம் செய்த அவனின் தவிப்பு, தனக்கு நீர் தரச்சொன்னதல்ல.என் இனத்தின் பிணைக்கப்பட்ட கைவிலங்கை உடைத்தெறியச் சொன்னதே அவனின் இறுதி வரையான உச்சரிப்பு.

திலீபனின் உண்ணா நோன்பின் மகத்துவத்தை அறிந்து ஈழத்து அன்னையர்கள் நல்லூர் திருவீதியெங்கும் நிறைந்திருந்தனர்.தம் மகனின் கோரிக்கை நிறைவேறாதா என ஒவ்வொரு நிமிடத்தையும் யுகமாய் கடந்து கொண்டிருந்தனர்.

தம் மகனின் கோரிக்கை கண்டு பெருமிதம் கொண்டாலும் நாட்கள் கடப்பதை உணர்ந்த ஈழத்து தந்தையரின் மனம் கரையத் தொடங்கியது.

தம் தோழன் திலீபனின் மன வலிமையை உரமாக்க ஈழத்து இளைஞர்கள் ஒன்று கூடி நெருப்புக் குழம்பாய் கொதித்துக் கொண்டிருந்தனர். தோழனின் கோரிக்கை நிறைவேறும்வரை அந்த இடத்தில் இருந்து அகல மாட்டோம் என உறுதி கொண்டனர்.

தம் சகோதரன் சாவின் விளிம்பில் படுத்துக் கிடப்பது கண்டு கண்ணீர்விட்டுக் கதறிக்கொண்டிருந்தனர் ஈழத்துத் தங்கையர்.

திலீபன் அவ்வாறு என்ன கோரிக்கையை முன்வைத்தான். வெறும் ஐந்தம்சக் கோரிக்கைகளே!



அதுவும் இந்திய தேசத்திடமே அவன் தனது கோரிக்கைகளை முன்வைத்தான்.

**திலீபனின் ஐந்து அம்சக் கோரிக்கைகளாவன...**

1.மீளக் குடியமர்தல் என்ற பெயரில் தமிழர் தாயகமான வடக்கு- கிழக்கில் மேற்கொள்ளப்படும் சிங்கள குடியேற்றங்களை தடுத்து நிறுத்த வேண்டும்.

2.சிறைச்சாலைகள், இராணுவ முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் உடன் விடுதலை செய்யப்பட வேண்டும்.

3.அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும்.

4.ஊர்க்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் அனைத்தும் முற்றாகக் களையப்பட வேண்டும்.

5.தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்கள் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட வேண்டும்.

தியாகத்தின் உன்னத நாடு இந்தியா.இந்தியா தன் தியாகப் போரை ஏற்று தமிழருக்கான தீர்வைப் பெற்றுத் தரும் என மலையாய் நம்பினான் திலீபன். ஆனால் நடந்ததோ வேறு மாதிரியாக அமைந்தது.

உலகத் தமிழினத்தின் வேண்டுகோள் அத்தனையும் பொய்த்துப் போனது.

தான் கொண்ட கொள்கையில் இருந்து சற்றும் பின்வாங்காத திலீபன் 1987 செப்டெம்பர் 26 ஆம் திகதி காற்றோடு காற்றாய் கரைந்து போனான்.

அந்த நாள் உலக வரலாற்றின் கறுப்பு நாள். அகிம்சை தோற்றுப் போன கரிநாள். அகிம்சை நாடான இந்தியாவே அகிம்சையை சாகடித்த சகிக்க முடியாத நாள்.

திலீபனின் தியாகத்துக்கு எல்லையே இல்லை. பன்னிரண்டு நாட்கள் நீர் கூட அருந்தாமல் வெறும் 23 வயதே ஆன இளைஞன் உண்ணா நோன்பிருந்து மடிந்து போனான் எனின் அவனின் மனஉறுதி எப்பேற்பட்டது.

அவனின் தியாகம் எவ்வளவு உன்னதமானது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

எம் தியாக தீபத்தை நாம் அஞ்சலிக்க தடைகோருவது எந்தவகையிலும் ஏற்புடையதல்ல.

திலீபன் மரணித்து 36 ஆண்டுகள் கடந்து விட்டன.ஆனால் அவனின் ஐந்தம்சக் கோரிக்கைகள் இன்றுவரை நிறைவேற்றப்படவில்லை.

மாறாக அவற்றை காலம் காலமாக வரும் அரச ஆட்சி இயந்திரங்கள் இயக்கியபடியே இருக்கின்றன.

அந்தக் கோரிக்கைகள் முற்றுப் பெறும் வரை திலீபனின் தாகம் தணியப் போவதில்லை.

அபிமன்யு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 207

## நேர்மையான மனிதர்களால் உலகம் அழகாகிறது

எங்கள் வீட்டுக்கு ஒரு மீன்காரரர் வந்து வாரம் ஒருமுறை மீன் கொடுத்துவிட்டு போவார். அவரிடம் பேரம் பேசமாட்டேன் என்பதால் அவரும் பெரிதாக ஆசைப்படமாட்டார். நியமான விலைக்கு கொடுப்பார். எனக்கு என்ன மீன் பிடிக்கும் என்று அவருக்கு தெரியும்.ஒவ்வொரு வாரம் புதன் கிழமைகளில் மீன் வாங்குவதை வழக்கமாக வைத்திருக்கின்றோம்.

இது போக அவர் மீனை சுத்தம் செய்து வெட்டி முடிப்பதற்குள். நிறைய விடயங்கள் பேசி விடுவோம். அவர் மகன் ஒரு மரைன் எஞ்சினியர். ஆறுமாதம் கப்பலில் பணி. மீதம் ஆறுமாதம் வீட்டில் இருப்பார். அவனுக்கு பொண்ணு பார்த்திருக்கேன் இந்த வேலை செட்டாவாது நீ வரும் போது வேலையை விட்டுட்டு வந்துடுன்னு சொல்லிட்டேன். அப்படின்னு நிறைய பகிர்ந்துக்குவார். அவனை படிக்க வைக்க நிறைய கடன் பட்டிருக்கார்.

நல்ல மீன்களை விற்கும் முன் எங்க வீட்டுக்கு வந்துவிட்டு பிறகுதான் வேறு இட்ங்களுக்கு செல்வார். திடீரென்று ஒருநாள் எனக்கு ஒரு உதவி செய்ய முடியுமா? என்று கேட்டார்.

ஏன் தயங்குறீங்க சும்மா சொல்லுங்கன்னு சொன்னேன். ரெண்டு மூணு நாளா வியாபாரமே இல்ல கொஞ்சம் நெருக்கடியாக உள்ளது கொஞ்சம் பணம் வேணும் உங்களுக்கு ஒரு வாரத்துல திருப்பி தாரேன்னு கேட்டார்.

இப்படியான எளிய மனிதர்களின் உறவுகள் கெட்டு இருக்கிறது இப்படி பணம் கொடுத்து.

அவர்களை குற்றம் சொல்லவில்லை. அவர்களுக்கு வரவுக்கும் செலவுக்கும் இடையவே நிறைய வாழ்க்கை போராட்டம். இதில் வாங்கும் கடனை திருப்பி கொடுக்க வாய்ப்பே இருக்காது. பிறகு நம் முகத்தில் எப்படி முழிப்பது என்று அச்சத்தில் நம்மை பார்க்கவே வர மாட்டார்கள்.

இப்படி ஏற்கனவே நிறைய பேரை இழந்து இருக்கிறேன். அதற்காக அவர்கள் மீது வருத்தமெல்லாம் இல்லை. அப்படியான எளிய மனிதர்களுக்கு கடன் கொடுத்து அவர்களை கடனாளி ஆக்கி விட்டோமே என்ற கவலை எனக்கு.

நான் அவரிடம் சொன்னேன் எனக்கு நீங்க கேட்ட பணம் தருவதில் ஆட்சேபனை இல்லை. ஆனால் ஒரு கண்டிசன் இந்த பணம் உங்களுக்கு தீபாவளிக்கு நான் கொடுக்கும் பரிசா வச்சுக்கோங்க. அதை திருப்பி எல்லாம் தர வேண்டாம்னு சொன்னேன். அன்று அவருக்கு இருந்த பிரச்சினை அவ்வளவு போல சரி என்று சற்று தயக்கத்துடனேயே வாங்கிகிட்டு போனார்.

பிறகு ஒருவாரம் கழித்து அண்ணே நல்ல வஞ்சிரம் மீன் இருக்கு சும்மா ஸ்லைஸ் போட்டா நல்லா இருக்கும் வெட்டவான்னு கேட்டார். வஞ்சிரம் பொரிக்க கொஞ்சம் சாளை மீன் குழம்புக்கு என்று வாங்கி ,எவ்வளவு என்று கேட்டேன் 650 ரூவா ஆச்சுண்ணே. என்ன வஞ்சிரம் இவ்வளவு குறைவா இருக்குன்னு கேட்டதுக்கு கேரளாவுல ஈஸ்டர் அதுனால அங்கே போனா தான் விலகூடும் இல்லன்னா பொதுவா இந்த விலைதான் என்று சொல்லிட்டு போக ஆயத்தமானார்.

நான் கூறினேன் என்னுடைய அண்ணன் வீடு பக்கத்து தெருதான் அங்கேயும் மறக்காம மீனைக் கொண்டு போய் விற்றுவிட்டு போங்கன்னு சொன்னேன். சரி என்று சென்று விட்டார்.ஆபீஸ் கிளம்பும் போது எங்க வீட்டில் கேட்டாங்க வஞ்சிரம் என்ன விலை கொடுத்து வாங்கினீங்கன்னு. கிலோ ஐந்நூறு ரூபாய்னு வாங்கினேன்னு சொன்னேன். அண்ணன் வீட்டில் 850 ரூபாய்க்கு கொடுத்துட்டு போயிருக்கார். ஏன் இப்படி செஞ்சார்னு அடுத்த வாரம் வந்தா கேளுங்கன்னு சொன்னாங்க.

அப்போது தான் எனக்கு உரைத்தது. மனிதர் எந்த அளவுக்கு நேர்மையாக இருக்கிறார் என்று. அவசரத்துக்கு என்னிடம் வாங்கிய காசை எனக்கே தெரியாமல் திருப்பி கொடுத்துட்டு போயிருக்கார். இப்படியான எளிய மனிதர்களிடம் தான் வாங்கிய காசை திருப்பி கொடுக்க வேண்டும் என்ற அந்த உன்னதமான எண்ணம் இருக்கிறது.

இப்படியான நேர்மையான மனிதர்களால் அழகான இந்த உலகம் பேரழகாகி விடுகிறது. பணம் எல்லாம் மதிப்பில்லை. இப்படியான மனிதர்களுக்கு அன்பை விதைப்போம். வாழ்வியல் தத்துவங்களை நமக்கு எளிமையாக உணர்த்திவிட்டு போய் விடுகிறார்கள்.

## சிறுகோள்களின் மாதிரிகளை பூமிக்கு கொண்டு வந்து சேர்த்த அமெரிக்க விண்கலம்

(வோஷிங்டன்)

அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனம் அனுப்பிய ஒசிரிஸ்- ரெக்ஸ் விண்கலம் நேற்று முன்தினம் உட்டா மாநிலத்தில் உள்ள பாலைவனத்தில் தரையிறங்கியுள்ளது.

7 ஆண்டுகளுக்கு முன்பு அது விண்ணுக்கு அனுப்பப்பட்டிருந்ததாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறு கோள்களின் ஆகப் பெரிய மாதிரிகளை அது பூமிக்குக் கொண்டுவந்துள்ளது எனவும் அந்த மாதிரிகள் சூரிய மண்டலத்தின் அமைப்பு, பூமி எப்படி மனித வாழ்க்கைக்கு ஏற்புடையானது முதலியவற்றை மேலும் புரிந்து கொள்ள உதவும் என்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.


2020ஆம் ஆண்டில் ஒசிரிஸ்-ரெக்ஸ் விண்கலம், பென்னு எனும் சிறிய கோளிலிருந்து சிறிதளவு தூசியைச் சேகரித்தது என்றும் பூமிக்கு ஆபத்து விளைவிக்கக் கூடிய சிறு கோள்களைப் பற்றித் தெரிந்து கொள்ள அது உதவும் என்று அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனம் கூறியுள்ளது. (5-6)



## ஜோ பை...

## வீழ்ச்சி அ...





(வே... அ... நடத்... பொரு...

அமெரிக்காவில் கடந்த 2021ஆம் ஆண்டு முதல் ஜனாதிபதி ஜோ பைடன் தலைமையிலான ஆட்சி நடைபெற்று வருகிறது. இவரது பதவிக்காலம் அடுத்த ஆண்டு நவம்பர் மாதத்துடன் முடிவடைகிறது.

இதனால் அங்கு அடுத்த ஆண்டு தேர்தலுக்கான பணிகள் தற்போதே சூடுபிடித்துள்ளன. இதற்கிடையே ஜோ பைடன் மீண்டும் ஜனாதிபதி

தேர்... அறி... சார்... டொ... கிறா... வே... தேர்... னர்... ஜோ...

## தூதரக உறவை மீண்டும் வலுப்படுத்திய ஈரான்-மாலைதீவு



(நியூயோர்க்)

ஈரான் மற்றும் மாலைதீவு 7 ஆண்டுகளுக்கு பின்னர் மீண்டும் தூதரக உறவை தொடங்குவதாக அறிவித்துள்ளன.

ஈரானின் நட்பு நாடாக இருந்த மாலைதீவு சுமார் 40 ஆண்டுகள் அதனுடன் தூதரக உறவை கொண்டிருந்தது.

ஆனால் மத்திய கிழக்கு நாடுகள் விவகாரத்தில் அதன் கொள்கைகள் பிராந்திய அமைதி மற்றும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருப்பதாக மாலைதீவு கருதியது. இதனால் கடந்த 2016 ஆம் ஆண்டு இரு நாடுகளும் தங்களது தூத ரக உறவை முறித்துக் கொண்டன.

இந்நிலையில் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் ஐ.நாசபையின் 78 ஆவது கூட்டத்தொடர் சமீபத்தில் நடைபெற்றது. இதில் ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் ஹொசைன் அமீர் அப்துல்லாஹியன் மற்றும் மாலைதீவு வெளியுறவுத்துறை அமைச்சர் அகமது கலீல் ஆகியோர் இந்த விவகாரம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

உடன்பாடு எட்டப்பட்டதையடுத்து மீண்டும் தூதரக உறவை தொடங்குவதாக இரு நாடுகளும் அறிவித்துள்ளன.

இதுகுறித்து ஈரான் வெளியுறவு அமைச்சகம் இரு நாடுகளின் நலன்கள் கருதி இந்த முடிவு எடுக்கப்பட்டதாக தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (5-6)



## நைஜரில் இருந்து தூதுவரையும் படை... திரும்பப் பெறுவதாக பிரான்ஸ் அ...

(பாரிஸ்)

நைஜரின் ஆட்சிக் கவிழ்ப்பை அடுத்து நைஜரில் இருந்து தனது தூதுவரையும் படைகளையும் திரும்பப் பெறுவதாக பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் அறிவித்துள்ளார்.


கடந்த ஜூலை மாதம் ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி மொஹமட்

பாஸ... ப்பு... தது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பைடன் ஆட்சியில் பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்துள்ளதாக மக்கள் தெரிவிப்பு

- பைடனின் ஆட்சியை ஏற்க மறுக்கும் 56 சதவீத மக்கள்
- சூடுபிடிக்கும் தேர்தல் களத்தில் மீண்டும் களமிறங்கும் ட்ரம்ப்



(வோஷிங்டன்)

**அமெரிக்காவில் ஜோ பைடன் தலைமையிலான ஆட்சி குறித்த கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டதில் சுமார் 44 சதவீதமான பேர் பைடன் ஆட்சியில் தங்களது பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து விட்டதாக கருத்துக்கள் தெரிவித்துள்ளனர்.**

தேர்தலில் தான் போட்டியிடுவதாக அறிவித்துள்ளார்.

அதேசமயம் குடியரசு கட்சி சார்பில் முன்னாள் ஜனாதிபதியான டொனால்ட்ரம்பும் போட்டியிடுகிறார். இவரை தவிர சுயேட்சை வேட்பாளர்கள் பலரும் இந்த தேர்தலில் போட்டியிடநிற்கின்றனர்.

இந்தநிலையில் அமெரிக்காவில் ஜோ பைடன் தலைமையிலான ஆட்சி குறித்த கருத்து கணிப்பு நடத்தப்பட்டது. இதன் முடிவுகள் நேற்று முன்தினம் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தின. இதில் சுமார் 44 சதவீதம் பேர் ஜோ பைடன் ஆட்சியில் தங்களது பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து விட்டதாக கூறி உள்ளனர்.

சூடுபிடித்த தேர்தல் களம் மேலும் சுமார் 37 சதவீதம் பேர் மட்டுமே ஜனாதிபதி ஜோ பைடனின் நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டுள்ளனர். 56 சதவீதம் பேர் இவரது செயற்பாட்டை ஏற்கவில்லை என்பது தெரிய வந்துள்ளது.

அதேசமயம் முன்னாள் ஜனாதிபதி ட்ரம்பின் ஆட்சியினை சுமார் 48 சத வீதம் பேர் ஏற்றுக்கொண்டு ள்ளனர். இது 2021 இல் அவர் தனது பதவியை ராஜினாமா செய்தபோது இருந்ததை விட 10 சதவீதம் அதிகம் ஆகும்.

74 சதவீதம் பேர் அடுத்த தேர்தலில் போட்டியிட முடியாத அளவுக்கு ஜோ பைடனுக்கு வயதாகி விட்டது என வாக்களித்துள்ளனர்.

எனவே அடுத்த ஆண்டு நடைபெற உள்ள தேர்தலில் ஜனநாயக கட்சி சார்பில் ஜோ பைடனுக்கு பதிலாக வேறு ஒருவரை நிறுத்த வேண்டும் என 62 சதவீதம் பேர் வாக்களித்துள்ளதாக அந்த கருத்து கணிப்பு கூறுகிறது. இதன் மூலம் அங்கு தேர்தல் களம் மேலும் சூடுபிடித்துள்ளது. (5-6)

## தொழிற்சாலை தீ விபத்தில் தாய்வானில் 9 பேர் உயிரிழப்பு



(தாய்பெய்)

தாய்வானில் கோல்ஃப் பந்துத் தயாரிப்புத் தொழிற்சாலையில் தீ மூண்டதால் 4 தீயணைப்பாளர்கள் உட்பட 9 பேர் உயிரிழந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடந்த வெள்ளிக் கிழமை மூண்ட தீயினாலும் அதனைத் தொடர்ந்த வெடிப்புகளாலும் 100 இற்கும் அதிகமானோர் காயமடைந்தனர். அவர்களில் பெரும்பாலோர் தொழிற்சாலை ஊழியர்கள்.

ஜனாதிபதி சாய் இங்-வென்னும் இதர உயர் அதிகாரிகளும் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பாதிக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு இரங்கல் தெரிவித்துக் கொண்டனர்.


ஆலையில் சேகரித்து வைக்கப்பட்ட பெராக்சைடு இரசாயனத்தால் வெடிப்பு நேர்ந்திருக்கலாம் எனக் கூறப்படுகிறது. (5-6)

## நைஜீரியாவில்

## எண்ணெய் சேகரிப்பு நிலையத்தில் தீப்பரவல்-34 பேர் உயிரிழப்பு

(அபுஜா)

நைஜீரியாவின் பெனின் எல்லைக்கு அருகில் உள்ள எண்ணெய் சேகரிப்பு நிலையத்தில் ஏற்பட்ட தீப்பரவல் காரணமாக இரு குழந்தைகள் உட்பட 34 பேர் உயிரிழந்துள்ளனர்.



எரிபொருள் சேகரிப்பு நிலையத்தை சூழவுள்ள பிரதேசங்களில் பல தீப்பிழம்புகள் வெடித்ததாகவும் அதனை தொடர்ந்து கரும் புகை அதிக அளவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த தீப்பரவலில் பலர் காயமடைந்த நிலையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உலகளாவிய ரீதியாக நைஜீரியா அதிக எண்ணெய் உற்பத்தி செய்யும் நாட்டில் இருந்து எரிபொருட்களை சட்ட விரோதமாக மக்கள் கடத்தி சென்று விற்பனையில் ஈடுபடுகின்றனர்.

குறிப்பாக எரிபொருட்களை கடத்தல்காரர்கள் எல்லை தாண்டி ஏனைய அயல்நாடுகளுக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்கின்றனர்.

உரிய பாதுகாப்பினை அவர்கள் பேண தவறுவதனால் தீப்பரவல்கள் அதிக அளவில் இடம்பெறுகின்றன. (5-6)

## படைகளையும் ...ஸ் அறிவிப்பு

பாஸ்ைம அகற்றி ஆட்சிக் கவிழ்ப்பு நடவடிக்கை இடம்பெற்றிருந்தது.

இந்நிலையில் நேற்று முன்



தினம் தொலைக் காட்சியில் உரையாற்றிய மக்ரோன், அடுத்த சில மணிநேரங்களில் தூதுவரும் பல இராஜதந்திரிகளும் பிரான்சுக்குத் திரும்புவார்கள் என அறிவித்திருந்தார்.

பிரெஞ்சு வீரர்கள் வசிக்கும் இராணுவ தளத்திற்கு வெளியேயும் தலைநகர் நியாமியிலும் கடந்த வாரங்களாக ஆயிரக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற னர்.

பல வாரங்களாக இராணுவத்தின் அழுத்தம் மற்றும் மக்கள் ஆர்ப்பாட்டங்களுக்குப் பின்னர் பிரான்ஸ் இந்த முடிவை அறிவித்துள்ளது. (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்கு அதிகாரம் கிடைத்தால் மைத்திரிக்கு பாடம் புகட்டுவேன்

## சரத் பொன்சேகா

(கொழும்பு)

என்றாவது ஒரு நாள் எனக்கு அதிகாரம் கிடைத்தால் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு நான் பாடம் புகட்டுவேன் எனவும் சட்டம் என்றால் என்ன? நீதி என்றால் என்ன என்பதை அவருக்கு கற்றுக் கொடுப்பேன் என்று பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

"மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் முன்னெடுக்கப்பட்ட 100 நாள் வேலைத்திட்டத்தில் எனக்கும், சிறானி பண்டாரநாயக்கவுக்கும் எவ்வாறு நியாயம் வழங்குவது என்பது தொடர்பில் ஆராய வேண்டும் என்ற முன்மொழிவு காணப்பட்டது.

இவற்றுக்கு இணக்கம் தெரிவித்த பின்னரே பொது வேட்பாளராக அவர் வேட்புமனு தாக்கல் செய்தார்.

அவருக்காக 100 தேர்தல் பிரசார கூட்டங்களை நான் நடத்தியிருக்கின்றேன். தேர்தல் கூட்டங்களில் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட ஐக்கிய தேசிய கட்சியின் அனைவரும் பாரிய அர்ப்பணிப்புக்களை செய்தனர்.

ஆனால் பதவியேற்று 48 மணித்தியாலங்களுக்குள் அவர்கள் அனைவருக்கு எதிராகவும் செயற்படத் தொடங்கியவரே மைத்திரிபால சிறிசேன.

மஹிந்த ராஜபக்ஷ எனது கேர்ணல் நிலையை நீக்கிய போது, எனக்கு பீல்ட் மார்ஷல் நிலையை வழங்குவதாக ஐக்கிய தேசிய கட்சி பாராளுமன்றத்தில் வாக்குறுதியளித்தது.

அந்த வாக்குறுதியையே மைத்திரிபால சிறிசேன நிறைவேற்றினார். மாறாக அவரது கால்களில் விழுந்து நான் பீல்ட்மார்ஷல் நிலையைப் பெறவில்லை.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கான சூழலை மைத்திரிபால சிறிசேன போன்றவர்கள் எவ்வாறு உருவாக்கினர் என்பதை நான் பாராளுமன்றில் தெளிவாகக் கூறியுள்ளேன் என தெரிவித்தார். (5-6)

# கண்டியில் விபத்துக்குள்ளான இரண்டு பேருந்துகள்

## 15 பேர் படுகாயம்



(கொழும்பு)

கொழும்பு - கண்டி பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் 15 பேர் படுகாயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று வெலிமடையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த பேருந்து ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேருந்துடன் மோதியதில் இந்த விபத்து இடம் பெற்றதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை விபத்தில் படுகாயமடைந்தவர்கள் வரக்காபொல மற்றும் வதுப்பிட்டிவல வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (5-6)

# தயாசிறி விரும்பினால் கட்சியில் இணையலாம்-மைத்திரி

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவை எந்த நேரத்திலும் சுதந்திரக் கட்சி ஏற்கத் தயார் எனவும் ஆனால் அவருக்கு பதவிகளை வழங்கு வதில் நம்பிக்கை இல்லை எனவும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கட்சி தலைமையகத்தில் கட்சியின் தொகுதி மற்றும் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் உப அமைப்புப் பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போதே முன்னாள் ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"தயாசிறி விரும்பினால் எந்த பிரச்சினையும் இல்லை. அவர் எந்த நேரத்திலும் வந்து இணையலாம் என மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். (5-6)

# சமுர்த்தி மற்றும் சங்கங்களில் ரூ.23 கோடி ஊழல் மோசடி

(கொழும்பு)

தேசிய கணக்காய்வு அலுவலகம் செப்டெம்பர் 18 அன்று வெளியிட்ட புதிய கணக்காய்வு அறிக்கையின் படி, சமுர்த்தி வங்கிகள் மற்றும் சங்கங்களை கொண்ட 2,000 சங்கங்களில் நடந்ததாகக் கூறப்படும் 107 மோசடிகள் இருபத்தி மூன்று கோடிக்கு மேல் இழப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி தணிக்கைக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின்படி, 2014 ஜனவரி 3ஆம் திகதி முதல் 2015 ஜூலை இறுதி வரை இடம்பெற்றுள்ள 15 மோசடிகளில் பதினைந்து கோடி ரூபாய்க்கு மேலான பணமும், 2019 முதல் பெப்ரவரி 2020 வரையான காலப்பகுதியில் 92 மோசடிகளில் பதினேழு கோடி ரூபாய்க்கு மேல் மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள கணக்காய்வு அறிக்கையின் மூலம் இந்த தகவல் வெளியாகியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (5-6)


## காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம். (வ-து)காரைநகர்
## பதவிவெற்றிடம்

❖ **பதவி: வங்கிச் சேவை முகாமையாளர் 111/10**
❖ **வெற்றிடம் 01**
சம்பள அளவுத்திட்டம் 19745-225*10-250*10 - 24495 (2/2022 இன் படி )

**தகைமைகள்**

அ) கூட்டுறவு ஊழியர் 11 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் முகாமை / மேற்பார்வை நிலைப் பதவியொன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம்.

கூட்டுறவு ஊழியர் 12 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் முகாமை/மேற்பார்வை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

**அல்லது**

ஆ) கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் வங்கியியல் துறையில் முகாமை/மேற்பார்வை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.

க.பொ.த.உயர்தரப்பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் வங்கியியல் துறையில் முகாமை / மேற்பார்வை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்.

**நிபந்தனைகள்**

I வயதெல்லை 18-45 இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். சங்க பணியாளர்களுக்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

II கூட்டுறவுச் சங்கங்களில் கடமை புரிபவர்கள் குறித்த சங்கத்தினூடாக விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டும்.

III விண்ணப்பத்துடன் கல்விச் சான்றிதழ், அனுபவச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழின் பிரதியும் இணைக்கப்படல் வேண்டும்.

IV மேற்படி பதவிகளுக்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி சங்கத்தினால் விதிக்கப்படும் பிணையினைச் செலுத்துதல் வேண்டும். சங்க எல்லைப் பரப்பிற்குள் வசிப்பவர்களுக்கு முன் உரிமை வழங்கப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை**

மேற்படி பதவிக்கான விண்ணப்பத்தினை சான்றிதழ்களின் பிரதிகளுடன் பொதுமுகாமையாளர் காரைநகர் பல.நோ.கூ சங்கம் எனும் முகவரிக்கு 10.10.2023 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.



## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்
## ஆதனப் பெயர்மாற்றம்
## 16/2, தச்ச ஒழுங்கை, வட்டாரம் - 03

வலிகாமம் மேற்கு பிரதேச சபை அராலி உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம்-03. தச்ச ஒழுங்கையிலுள்ள இல : 16/2 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் பொன்னர் வல்லிபுரம் என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை அம்பலவாணர் சொர்ணலிங்கமும். அம்பலவாணர் இராமசாமியும். சின்னத்தம்பி குமாரசுவாமி கைம்பெண் மௌனமணியும் ஆகியவர்கள் குறித்த ஆதனம் தமது தந்தைவழி பேரனாரான பொன்னம்பலம் இராமு என்பவருக்கு உரித்தானதாக இருந்தது எனவும். அவர் மரணசாதனம் இன்றியும் தத்துவம் எடுக்க வேண்டிய பெறுமதிக்கு குறைவான சொத்துக்களையும். அதற்கு வாரிசுகளாக அம்பலவாணர். நாகம்மா ஆகிய இருவரையும் விட்டிறந்த பின்னர் குறித்த இருவராலும் குறித்த ஆதனம் கூட்டாக ஆட்சி செய்யப்பட்டு வரப்பட்டது என்றும். குறித்த அம்பலவாணர் தனது சீவிய காலத்தில் தனது பெண்பிள்ளைகளான குறித்த சின்னத்தம்பி குமாரசுவாமி கைம்பெண் மௌனமணிக்கும். திருநாவுக்கரசு பெண் யோகரத்தினம் என்பவருக்கும் சீதனம் கொடுத்து தனது சொத்துக்களுக்கு வாரிசாக அம்பலவாணர் சொர்ணலிங்கமும். அம்பலவாணர் இராமசாமியும் ஆகிய தம்மிருவரையும் வாரிசாக விட்டு இறந்திருந்தார் என்றும். குறிந்த நாகம்மா என்பவர் செல்லப்பா என்பவரை விவாகம் செய்திருந்து சந்ததி எதுவுமின்றியும் மரணசாதனம் எதுவுமின்றியும் இறக்க குறித்த ஆதனத்தில் குறித்த நாகம்மாவுக்குரிய இரண்டிலொரு பங்கு அவரின் மருமக்களான தம்மூவரையும். தமது சகோதரியான திருநாவுக்கரசு பெண் யோகரத்தினத்தையும் வந்தடைந்தது எனவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு மு.சபாநாதன் முகதாவில் 1978/15.10.1984 ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்கள்.

**செல்லையா திருநாவுக்கரசு பெண் யோகரத்தினம்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு மு.சபாநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1979/15.10.1984 ஆம் இலக்க உறுதியால் குறித்த **அம்பலவாணர் சொர்ணலிங்கமும், அம்பலவாணர் இராமசாமியும், சின்னத்தம்பி குமாரசாமி கைம்பெண் மௌனமணியும்** ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தினை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**கைலாசப்பிள்ளை கனகரத்தினமும் பெண் கனகமணியும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு மீ.பாக்கியநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 34/19.06.1985 ஆம் இலக்க உறுதியால் குறித்த செல்லையா திருநாவுக்கரசு பெண் யோகரத்தினம் ஆகியவரிடமிருந்து மேற்படி ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

**அரியரத்தினம் அர்ச்சுதமேனன் பெண் லோகேஸ்வரி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு சபாரத்தினம் தங்கமாமயிலோன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2258/27.12.2004 ஆம் இலக்க உறுதியால் குறித்த **கந்தப்பு கைலாசப்பிள்ளை கனகரத்தினம் கைம்பெண் கனகமணி** ஆகியவரிடமிருந்து மேற்படி ஆதனத்தின் ஒரு பகுதியினை சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**கந்தசாமி தவராசாவும் பெண் லதாவும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு சபாரத்தினம் தங்கமாமயிலோன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 3353/22.08.2013 ஆம் இலக்க உறுதியால் குறித்த **அரியரத்தினம் அர்ச்சுதமேனனும் பெண் லோகேஸ்வரியும்** ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

**தவராசா ராம்ஜி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு பிரதீபா கருணாகரன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1524/08.10.2018 ஆம் இலக்க உறுதியால் குறித்த **கந்தசாமி தவராசாவும் பெண் லதாவும்** ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தினை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த **தவராசா ராம்ஜி** ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **தவராசா ராம்ஜி** ஆகீயவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை.** (7220)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மன்னாரில் அஞ்சலக ஊழியர்கள் போராட்டம்



(மன்னார்)

கொழும்பில் ஒருங்கிணைந்த தபால் சங்கம் ஏற்பாடு செய்த தொழிற்சங்க போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து மன்னார் அஞ்சலகம் சார்பாக ஊழியர்களால் நேற்று திங்கட்கிழமை மதியம் 12 மணி முதல் 1 மணி வரை போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த போராட்டம் மன்னார் அஞ்சலகத்திற்கு முன்பாக இடம்பெற்றுள்ளது.

குறித்த போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து முன்னெடுத்தனர்.

சம்பள முரண்பாடு தீர்த்தல், வாழ்க்கைச் செலவாக 20 ஆயிரம் ரூபாவை உயர்த்தல், பதவி உயர்வை வழங்கல், வெற்றிடங்களை நிரப்புதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து குறித்த போராட்டம் மன்னார் அஞ்சலகத்திற்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டது. (5-6-285)

# திலீபனின் நினைவேந்தலை முன்னிட்டு பல்கலை மாணவர்களால் மரக்கன்றுகள் வழங்கி வைப்பு



(யாழ்ப்பாணம்)

தியாகதீபம் திலீபனின் நினைவேந்தலை முன்னிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களினால் மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன.

தியாகதீபம் திலீபனின் 36 ஆம் ஆண்டு நினைவேந்தல், தாயகம் எங்கும் உணர்ச்சியுடன் இடம்பெற்று வரும் நிலையில் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் நேற்று திங்கட்கிழமை மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன.

அதன் போது, யாழ் நகர் பகுதி, மருதனார்மடம் சந்தைப் பகுதி மற்றும் நல்லூர் தியாக தீபம் திலீபன் நினைவுத்தூபி அமைந்துள்ள பகுதிகளில் பொது மக்களுக்கு மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன. (5-6-33)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 200 | 150 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 450 | 450 |
| தக்காளி | 200 | 180 | 150 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 160 | 180 | 200 |
| கோவா | 150 | 140 | 150 | 200 |
| கரட் | 400 | 230 | 250 | 300 |
| பூசணி | 80 | 80 | 80 | 80 |
| புடோல் | 80 | 80 | 100 | 200 |
| வாழைக்காய் | 200 | 150 | 180 | 240 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 220 | 200 | 200 | 200 |
| பாகற்காய் | 400 | 450 | 400 | 400 |
| வெண்டக்காய் | 100 | 120 | 100 | 200 |
| கருணைக் கிழங்கு | 140 | 130 | 160 | 200 |
| பயற்றங்காய் | 300 | 300 | 160 | 200 |
| லீக்ஸ் | 160 | 120 | 150 | 150 |
| பீற்றூட் | 140 | 120 | 180 | 160 |
| கறிமிளகாய் | 250 | 350 | 280 | 250 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 150 | 100 |
| போஞ்சி | 400 | 400 | 450 | 500 |
| கத்தரிதம்புள்ள | 150 | 120 | 150 | 160 |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 60 | 100 |
| தேசிக்காய் | 1000 | 1200 | 1200 | 2000 |
| தேங்காய் (ஒன்று). | 80 | 80 | 70 | 60-80 |
| இராசவள்ளி | 350 | 450 | 350 | 400 |
| வெங்காயப்பூ | 250 | 300 | — | 350 |
| முள்ளங்கி | 80 | 100 | 100 | 160 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 160 | 40 | 60 |
| ஈரப்பலா | 80 | 80 | 60 | 120 |


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்

(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)



பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சநேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி

முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை

தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு

மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி

உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்

தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்

சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-

பரப்பு 20 இலட்சம்

(c-7324)

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 292





"பூங்குழலி! பூங்குழலி!"

"ஓகோ! விழித்துக் கொண்டு விட்டாயா?"

"என் கட்டை அவிழ்த்து விடு! நானும் உனக்கு உதவி செய்கிறேன்."

"நீ சும்மா இருந்தால் போதும் அதுவே பெரிய உதவி. கயிற்றை அவிழ்க்க வேண்டுமென்றால் நீயே அவிழ்த்துக் கொள்ளலாம். ஆனால் மறுபடியும் கடலில் குதித்துவிடாதே!"

வந்தியத்தேவன் தன்னைக் கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்து விட்டுக்கொண்டான்.

பூங்குழலி பாய் மரத்தைத் தூக்கி நிறுத்தினாள். அதில் பாயை விரித்துப் பறக்க விட்டாள்! படகு இப்போது உல்லாசமாகச் சென்றது விரைவாகவும் சென்றது.

"சமுத்திரகுமாரி!" "ஏன்?"

"தாகமாயிருக்கிறது!"

"உப்புத்தண்ணீர் குடித்திருக்கிறாய் அல்லவா? தாகமெடுக்காமல் என்ன செய்யும்?"

சுரைக் குடுக்கை ஒன்றை எடுத்துக் கொண்டு சமுத்திரகுமாரி வந்தியத்தேவன் அருகில் வந்தாள்.

"உனக்குச் சாப்பாடு கூடக் கொண்டு வந்தேன். நீ கடலில் குதித்த போது அதுவும் விழுந்துவிட்டது! நல்ல வேளையாக இந்தச் சுரைக் குடுக்கை தப்பிப் பிழைத்தது."

இப்படிச் சொல்லிக் கொண்டே சுரைக் குடுக்கையை மூடியிருந்த தக்கையை எடுத்து விட்டுக் கொடுத்தாள். வந்தியத்தேவன் அதை வாங்கித் தண்ணீர் குடித்தான்.

தொண்டையைக் கனைத்துச் சரிப்படுத்திக்கொண்டு, "உன்னைப் பற்றித் தவறாக எண்ணிக் கொண்டு விட்டேன் அதற்காக வருத்தப்படுகிறேன்" என்றான்.

"அது ஒன்றும் பாதமில்லை. நீ யாரோ? நான் யாரோ? பொழுது விடிந்தால் பிரிந்துவிடப் போகிறோம்."

"இப்போது நேரம் என்ன?"

"வானத்தைப் பார்த்துத் தெரிந்து கொள். சப்த ரிஷி மண்டலத்தைப் பார்!" என்றாள் பூங்குழலி.

வந்தியத்தேவன் வட திசையில் அடிவானத்தைப் பார்த்தான். அவன் படகு ஏறும் போது பார்த்ததற்கு இப்போது சப்த ரிஷிகள் இடம் மாறிப் பாதி வட்டம் வந்திருந்தார்கள். அந்த அருந்ததி நட்சத்திரம் வசிஷ்டருடன் எப்படி ஒட்டிக் கொண்டே வருகிறது! அதிசயந்தான்! துருவ நட்சத்திரம் மட்டும் இருந்த இடம் விட்டு அசையவில்லை. வானவெளியும் மூலைக் கடலும் சேரும் அந்த இடத்தில் துருவ நட்சத்திரம் யுக யுகமாக நிலைத்து நின்று வருகிறது! எத்தனை எத்தனையோ கப்பல் மாலுமிகளுக்கு வழியும் திசையும் காட்டிக்கொண்டு வருகிறது. துருவ நட்சத்திரம்! அதை யாருக்கோ உதாரணமாகச் சொன்னார்களே? யார் சொன்னது? யாரைச் சொன்னது? ஞாபகம் வருகிறது குடந்தை சோதிடர் சொன்னார். இளவரசர் அருள்மொழிவர்மருக்கு வடதுருவத்தை உதாரணமாகச் சொன்னார். இளவரசரைப் பார்க்கும் பேறு நமக்கு உண்மையிலேயே கிடைக்கப் போகிறதா? இந்தப் பெண்ணின் உதவியினால் கிடைக்க போகிறதா? பூங்குழலி தன் இடத்தில் போய் உட்கார்ந்து கொண்டாள்.

"நேரம் என்னவென்று தெரிந்ததா? மூன்றாம் ஜாமத்தில் பாதி நடக்கிறது. காற்றுத் திரும்பி விட்டது. பொழுது விடிய நாகத்தீவுக்குப் போய்விடுவோம்" என்றாள்.

கை சளைத்து உணர்விழந்த தன்னைக் கடலிலிருந்து படகில் ஏற்றுவதற்கு இவள் எவ்வளவு கஷ்டப்பட்டிருக்க வேண்டும்? எப்படித்தான் தன்னந் தனியாகச் செய்தாளோ? அபூர்வமான நங்கை இவள்!"

'இதோ அவள் எழுந்திருக்கிறாளே, ஏன்? தான் விழித்து விட்டதைப் பார்த்து விட்டுத்தான் தன்னை நெருங்கி வருகிறாளோ? வந்து என்ன செய்யப் போகிறாள்? இல்லை! இல்லை! வேறு ஏதோ செய்கிறாள். ஆகா! பாய்மரத்தில் பாயைக் கட்டப் போகிறாள்! எவ்வளவு கடினமான வேலை! அதுவும் தன்னந்தனியாகச் செய்வது?'


(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## ஆமையும் அன்னங்களும்

(நேற்றைய தொடர்ச்சி...)



சுற்றுலா என்பது நாம் உயிரினங்களை கண்டுகளிப்பதற்கு மட்டுமே.

அவற்றை துன்புறுத்துவதற்கு அல்ல என்பதை புரிந்து கொள்ள வேண்டும். சரி நாம் கதைக்கு வருவோம். மிகவும் கஷ்டப்பட்டு அன்னங்கள் ஒரு அழகான குளத்தை கண்டுபிடித்தன. சந்தோசமா தனது நண்பனை கூட்டி வர விரைந்தன.

அன்னங்கள் வருவதற்குள் ஆமை ஒரு அருமையான திட்டம் போட்டு வைத்திருந்தது. ஆமையின் முன் அன்னங்கள் சிரித்த முகத்துடன் வந்தன. "என் அருமை நண்பனே, நாங்க இதை விட அழகான குளத்தை கண்டுபிடித்திருக்கிறோம். அது எப்போதும் வற்றாத குளமாம். இனி நாம அங்கேயே சந்தோசமா இருக்கலாம். சரி இங்கிருந்து நாம போறது எப்படி? என கேட்டது.

ஆமையும் புன்னகையுடன், "நண்பர்களே, ஐடியா ரெடி" என தனது யோசனையை சொல்ல ஆரம்பித்தது.முதலல உங்க காலல இந்த குச்சியை வெச்சிட்டு பறக்க தொடங்கணும். நீங்க பறக்க தொடங்கியதும் நான் குச்சி யோட அந்த பக்கத்தை வாயில நல்லாப்பிடிச்சு நானும் உங்களோட பறந்து வருவேன்னு சொல்லுச்சு. ஆமையோட மூளையை அன்னங்கள் வெகுவாக பாராட்டின. ஆமையும் தன்னுடைய அறிவை எண்ணி பெருமைப்பட்டது. மூவரும் கிளம்ப தயாரானார்கள். திட்டப்படியே பறக்க தொடங்கின. அன்னத்திற்கு ஆச்சரியம் தாங்கவில்லை. மூளைக்கார ஆமை நண்பா, உன்ன வெச்சுட்டு பறக்கிறது எங்களுக்கு கனவு மாதிரி இருக்கு. எல்லாரும் எப்படி பாக்குறாங்க பாரு என தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தின. மக்களும் மேல பறக்கும் இந்த மூவரையும் பார்த்து ஆச்சர்யப்பட்டார்கள். அந்த பறவைகள் பாரு தங்கள் நண்பனை எப்படி தூக்கிட்டு போறாங்க. கில்லாடி பறவைகள்னு" ஒருத்தர் சொன்னார். இந்த பறவைக்கு எவ்வளவு அறிவு பாரேன். ஆமையை தூக்கிட்டு போகுதுனு இன்னொருவர் சொல்றார். இப்படி பார்க்கும் மனிதர்கள் எல்லாம் அன்னங்களையே பாராட்டினார்கள். இதை கேட்டுக் கொண்டிருந்த ஆமை கோபப்பட்டு பொறுமை இழந்தது. அது என்னோட ஐடியாடா என கத்தியது. தன் நிலையை மறந்த ஆமை, வாயிலிருந்த குச்சியில் இருந்து தவறியது. ஆமையோ தன்னுடைய தற்பெருமை எண்ணத்தால் கீழே தரையை நோக்கி விழுந்து கொண்டிருந்தது. அன்னங்களும் தங்கள் நண்பனை இழந்தன. கண்ணீருடன் குளத்தை நோக்கி பறந்தன.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையை உறுதியாகக் கடைப்பிடிப்பதிலிருந்து தான் வலிமை எல்லாம் கிடைக்கிறது.
– காந்திஜி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தியாக தீபமே மறந்தும் இப்போது விழித்தெழ வேண்டாம்

36 வருடங்கள் கடந்து திரும்பிப் பார்க்கின்றோம். நல்லூர்க் கந்தனின் வடக்கு வீதி எங்கும் மக்கள் கூட்டம். எல்லோர் முகத்திலும் துன்பத்தின் ரேகைகள்.

பார்த்தீபனின் உண்ணாவிரதம் பன்னிரெண்டு நாட்களாகிவிட்டன. இன்னும் அவனின் கோரிக்கைகள் கோரிக்கையற்றுக் கிடக்கின்றன.

அந்தோ! எங்கள் பிள்ளைக்கு ஏதேனும் ஆகிவிடுமோ என்ற ஏக்கம் ஒட்டுமொத்தத் தமிழ் மக்களையும் வதைத்துக் கொண்டிருந்தது.

என்ன செய்வது ஏது செய்வது? என்றறியாத திகைப்பு.

நீராகாரம் ஏதுமில்லாத அந்தத் தியாகத்தின் உடல் உறங்கிக் கொண்டிருக்கிறது.

வைத்திய நிபுணர் சிவகுமாரன் திலீபனின் உடலைச் சோதனை இடுகின்றார். உறங்குகின்ற உத்தமன் இனி விழித்தெழ மாட்டான் என்பதை குறியீடாக உணர்த்த அவனின் திருவடிகளைத் தொட்டு வணங்குகிறார் வைத்திய நிபுணர்.

மைந்தனே! தியாகத்தின் இமயமே பிரிந்தனையோ! பிரிவுத் துயர் தாளாத மக்கள் விம்பி அழுகின்றனர்.

ஓர் உத்தமனைக் காப்பாற்றத் தவறிய துன்பம் போலும் கதிரவனும் மேற்றிசையில் வீழ்ந்தனன்.

தியாகத்தின் உச்சமாக இந்த உலகம் போற்றுகின்ற உத்தமனுக்கு மக்கள் திரண்டெழுந்து அஞ்சலி செலுத்தினர்.

ஊரெல்லாம் சோகம் இசைத்தது. தியாக தீபம் திலீபனின் திருவுடலை எங்கள் ஊரிலும் ஒருகணம் வைத்து வணங்க வாய்ப்புத் தாருங்கள் என்று மக்கள் கெஞ்சினர்.

தன் இனத்துக்காகப் பன்னிரெண்டு நாட்கள் உண்ணாநோன்பிருந்து உயிர்த்தியாகம் செய்த திலீபனின் திருவுடல் ஊரெங்கும் வலம் வந்தது.

ஆம், 36 ஆண்டுகளுக்கு முன் நடந்த அந்தத் தியாக வேள்வியை யாரால் மறக்க முடியும்.

அந்தோ! இன்று எல்லாம் முடிந்து போயிற்று.

பார்த்தீபா நின் தியாகம் இன்று எங்கள் தமிழ் அரசியல்வாதிகளின் வியாபாரப் பொருளாயிற்று.

இன்னும் சிலருக்கு அது குழப்பத்தை ஏற்படுத்துவதற்கான கொண்டாட்டமாகவும் உள்ளது.

உன்னை உள்ளத்தால் நினைந்து உருகுகின்ற மக்கள் மௌனமாகப் பிரார்த்திக்கின்றார்கள்.

என்னவனே! உன் உடலையும் இம் மக்கள் உயிர்ப்புடன் வாழ்வதற்காக ஈந்தளித்தவன் நீ.

உன் நினைவேந்தல் புனிதமானது. அது அரசியலுக்கு அப்பாற்பட்டது.

ஆயினும் இப்போது தமிழ் மக்களை ஏமாற்றுகின்ற ஆலாவர்ண அரசியலில் எல்லாமும் சில்லறையாக ஆக்கப்பட்டுள்ளன.

பரவாயில்லை பார்த்தீபா ! நீ இப்போது விழித்தெழாதே. காலம் வரும். உன் தியாகத்தை உலகம் போற்றுகின்ற நேரம் வரும். அப்போது எங்கள் சில்லறை அரசியல் இருந்த இடம் தெரியாமல் அழிந்திருக்கும். அந்த தூய்மையான காலத்தில் மக்களின் மனங்களில் நீ விழித்தெழுவாய். இது சத்தியம்.

### 12 மில்லியன் பெறுமதியான

# பைசர் தடுப்பூசிகளை அழிக்க வேண்டியுள்ளது

## சுகாதார அமைச்சர் கெஹலிய

(கொழும்பு)

கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்காக இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட 14.05 மில்லியன் ஃபைசர் (pfizer) தடுப்பூசிகளில் சுமார் 12 மில்லியனை அழிக்க வேண்டியுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர்,

கொரோனா பரவுவது ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டதன் பின்னர் தடுப்பூசி போடுவதால் வேறு நோய்கள் வருவதாக சமூகத்தில் கருத்து' பரவி வருவதால் தடுப்பூசிகள் பொதுமக்களிடையே கைவிடப்பட்டது.

மீதமுள்ள தடுப்பூசிகளின் ஆயுட்காலம் முடிவதற்குள் அண்டைய நாடுகளுக்கு தடுப்பூசிகளை வழங்குவதற்கான சாத்தியம் குறித்து உலக சுகாதார நிறுவனத்துடன் கலந்துரையாடியுள்ளோம்.

தடுப்பூசிகளைப் பெற முன்வந்த மூன்று நாடுகளும் சேமிப்புச் சிக்கல்கள் உட்பட பல சிக்கல்கள் காரணமாக தடுப்பூசிகளைப் பெற மறுத்துவிட்டன என தெரிவித்தார். (ம-7)

# வாவியில் மூழ்கி சிறுவன் பலி

(எம்பிலிப்பிட்டி)

எம்பிலிபிட்டி - சந்திரிகா வாவியில் மூழ்கி ஒன்பது வயது சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சிறுவன் தனது தாய் உள்ளிட்ட இருவருடன் சந்திரிகா வாவியில் நீராடச் சென்ற போதே நீரில் மூழ்கியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்போது, பொலிஸ் உயிர்காப்பு உத்தியோகத்தர்கள் சிறுவனை மீட்டு சிகிச்சைக்காக எம்பிலிப்பிட்டி வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர்.(ம-7)

## ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் மீண்டுமொரு ஈஸ்டர் தாக்குதல்

### ஐக்கிய மக்கள் சக்தி எச்சரிக்கை

(கொழும்பு)

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் போன்றதொரு தாக்குதல் மீண்டும் நடத்தப்படலாம் என ஐக்கிய மக்கள் சக்தி எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பெரேரா இந்த தகவலை வெளியிட்டுள்ளதுடன், அவர் மேலும் கூறியுள்ளதாவது,

2019ஆம் ஆண்டு ஈஸ்டர் தாக்குதலை நடத்தியவர்கள் கைதுசெய்யப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கிறோம்.

2019ஆம் ஆண்டு ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதலுக்குப் பின்னால் இருந்தவர்கள் யாரேனும் தலைமறைவாக இருந்தால், அவர்கள் விரைவில் கைதுசெய்யப்பட வேண்டும்.

அவர்களை சுதந்திரமாக நடமாட அனுமதித்தால் 2024 ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டு இன்னொரு குழப்பத்தை உருவாக்கலாம் என்றும் அவர் எச்சரித்துள்ளார். (ம-7)

### மானிப்பாய் பகுதியில்

## இளைஞன் கடத்தப்பட்ட விவகாரம் பொலிஸாரால் மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

இளைஞனை மோட்டார் சைக்கிளில் கடத்தி சென்று தாக்கிஅவரது பெறுமதியான கைத் தொலைபேசி மற்றும் மணிக்கூடு என்பவற்றை கொள்ளையடித்த குற்றச்சாட்டில் மூன்று இளைஞர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் கடந்த சனிக்கிழமை வீதியில் சென்ற இளைஞனை மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் கடத்தி ஆள்நடமாட்டம் அற்ற பகுதிக்கு கொண்டு சென்று தாக்கி அவரது, கைத்தொலைபேசி மற்றும் மணிக்கூடு என்பவற்றை கொள்ளையடித்து தப்பி சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட இளைஞனால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதன் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் மூவரை கைது செய்துள்ளதுடன் , அவர்களிடம் இருந்து இரண்டு மோட்டார் சைக்கிளையும் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் அவர்களை மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,33)

## கடலில் மூழ்கி வெளிநாட்டு பிரஜை ஒருவர் உயிரிழப்பு

தங்காலைக் கடலில் தனது ஆண் நண்பனுடன் நீராடிய போலந்து நாட்டைச் சேர்ந்த யுவதியொருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

குறித்த இரு போலந்து பிரஜைகளும் நேற்று முன்தினம் தங்காலை கடலில் குளிக்க சென்ற வேளை பலத்த கடல் அலைகளால் அவர்கள் இருவரும் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர் எனவும், பின்னர் அவர்கள் இருவரையும் அங்கிருந்தவர்கள் மீட்டு தங்காலை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் 22 வயதுடைய போலந்து யுவதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தங்காலை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

# சர்வதேச கிரிக்கெட் மைதானம் யாழில் அமைக்க விருப்பம்

## இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணன்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் சர்வதேச தர கிரிக்கெட் மைதானத்தை உருவாக்கும் எண்ணம் தனக்கு உண்டு என தென்னிந்திய பிரபல இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வருகை தந்த சந்தோஷ் நாராயணன் தனியார் விருந்தினர் விடுதியில் ஊடகவியலாளர்களை சந்தித்த வேளையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் ,

யாழ்ப்பாணத்தில் ஆகஸ்ட் 21ஆம் திகதி மாபெரும் இசை நிகழ்வை நடத்த உள்ளேன். துவண்டு போய் உள்ள மக்களுக்கு உற்சாகம்தரும் வகையில் இந்த இசை நிகழ்வு இருக்கும் என நம்புகிறேன். இந்த இசை நிகழ்வு முற்றிலும் இலவசமானது.

அனைத்து தரப்பு மக்களும் ஒன்றிணையும் நிகழ்வாக இருக்கும். அடுத்து வரும் நாட்களின் நிகழ்வுகள் தொடர்பில் அறிவிப்புக்கள் தொடர்ந்து வரும்.

புலம்பெயர் நாடுகளில் உள்ள இசைத்துறை சார்ந்தவர்களையும் , எனது குழுவையும் ஒன்றிணைத்து யாழ்ப்பாணத்தில் நடாத்தும் இந்த இசை நிகழ்வு இலங்கை தாண்டி வெளிநாடுகளில் உள்ளவர்களின் கவனத்தையும் ஈர்க்கும் என்ற நம்பிக்கை உண்டு என்றார்.

அதேவேளை, யாழ்ப்பாணத்தில் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் உண்டு எனவும் தெரிவித்தார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா-இந்தியா உறவில் விரிசல் பின்னணி பற்றி ஒரு தொகுப்பு



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

01

சீக்கியத் தலைவர் ஹர் தீப்சிங் நிஜ்ஜார் கொலை தொடர்பான பிரச்சினையால் இந்தியா - கனடா இடையே பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. கனடாவைச் சேர்ந்த சீக்கிய தலைவரான ஹர்தீப சிங்நிஜ்ஜார் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தின் பின்னணியில் இந்திய அரசு இருக்கலாம் என அந்நாட்டின் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளதுடன் இந்திய தூதரக அதிகாரியையும் கனடா வெளியேற்றியுள்ளது. கனடாவின் குற்றச்சாட்டை மறுத்துள்ள இந்திய அரசு கனடா தூதரகத்தின் அதிகாரி நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளது. இந்தச் சம்பவத்தால், கனடா - இந்தியா உறவுக் கிடையில் விரிசல் ஏற்பட்டு, பதற்றமான சூழ்நிலை நிலவுகிறது. மேலும் கனடாவில் இருந்து வெளியேற்றபட்ட இந்தியதூதரக அதிகாரிரோவின் வெளிப் புலனாய்வு அமைப்பின் மூத்த அதிகாரி என கனடாவில்இருக்கும் அரசியல் வல்லுநர்களின் கருத்தாகும்.

கனடா, சுர்ரே நகரில் காலிஸ்தான் அமைப்பை சேர்ந்த தீவிரவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொல்லப்பட்டார். சீக்கியர்களுக்கு இந்தியாவிடம் இருந்து தனி நாட்டை பெறுவதற்கு இவர் முயற்சி மேற்கொண்டிருந்ததாக கூறப்படுகிறது. மேலும், மத்திய அரசால் தேடப்படும் தீவிரவாதியாக அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் அவர் கொல்லப்பட்ட சம்பவம் பூதாகரமாக வெடித்துள்ளது. அதனைத் தொடர்ந்து நாடாளுமன்றத்தில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, வெளிநாட்டை சேர்ந்த எவரும் இங்கு வசிக்கும் குடிமகனை கொல்வது என்பது ஏற்க முடியாதது.அது கனடாவின் இறையாண்மை மீது நடத்தப்பட்ட தாக்குதல். இந்த விடயத்தில் என்ன நடந்தது என்ற உண்மையை வெளிக்கொண்டுவர கனடா அரசுடன் இந்தியா ஒத்துழைக்க வேண்டும் என்று கூறியிருந்தார்.

காலிஸ்தான் அமைப்பை சேர்ந்த தீவிரவாதிகள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கனடா அரசிடம் இந்தியா பல முறை வலியுறுத்தியும் இருக்கிறது. இதுகுறித்து இந்திய பிரதமர் நரேந்திர மோடி, தற்போதைய கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவிடம் வலியுறுத்தி வரும் நிலையில இதற்கு முன்பே, 1982 ஆம் ஆண்டில், கனடாவின் பிரதமராக இருந்த தற்போதைய பிரதமர் ட்ரூடோவின் தந்தையான பியர் ட்ரூடோவிடம் அன்றைய பிரதமர் இந்திரா காந்தி கேட்டிருப்பதாகத் தகவல் வெளியாகி இருக்கிறது.

கனடாவில் அதிகரிக்கும் காலிஸ்தான் நடவடிக்கை குறித்த கேள்விக்குப் பதிலளித்த ஜஸ்டின் ட்ரூடோவும், "கருத்துச் சுதந்திரம், போராட்டம் நடத்தும் உரிமை ஆகியவற்றை கனடா எப்போதும் பாதுகாக்கும். இது எங்களுக்கு எப்போதும் மிகவும் முக்கியம். அதே நேரத்தில், வன்முறையைத் தடுக்கவும், வெறுப்பை பின்னுக்குத் தள்ளவும் எப்போதும் நடவடிக்கை எடுப்போம். இங்கே ஒருசிலர் நடந்து கொள்வது ஒட்டுமொத்த கனடாவின் நிலைப்பாடு இல்லை" என்று கடுமையாகவே கூறியிருந்தார். இதன் காரணமாக, இந்த விவகாரத்தில் கடந்த சில மாதங்களாகவே இரு நாடுகளுக்கும் இடையே அதிருப்தி இருந்துவந்த நிலையில், தற்போது வெளிப்படையாகவே பூதாகரமாகி விட்டது.

கடந்த ஜூன் 4ஆம் திகதி, பிராம்ப்டனில் மறைந்த முன்னாள் இந்திய பிரதமர் இந்திரா காந்தியின் படுகொலையை காலிஸ்தான் அமைப்பினர் கொண்டாடினர். அதாவது, சீக்கியப் படுகொலையின் நினைவுநாள் அனுசரிக்கப்பட்டது. காலிஸ்தான் ஆதரவு சீக்கியர்களால் நடத்தப்பட்ட அந்தப் பேரணியில் "WE NEVER FORGET 1984 - SIKH GENOCIDE" என்ற வாசகத்துடன் ஓர் அணிவகுப்பு வாகனமும் பங்கேற்றது.

பேரணியில் இடம்பெற்ற ஊர்வலம்




அந்த வாகனத்தில் "சிறீதர்பார் சாஹிப் தாக்குதலுக்கான பழி வாங்கல் -REVENGE என்று எழுதப்பட்ட பதாகையின் முன்னணியில் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி தனது சீக்கிய மெய்க்காப்பாளர்களால் சுட்டுப் படுகொலைசெய்யப்படுவது போன்ற சித்திரிப்பு சிலைகள் காட்சியமைக்கப்பட்டிருந்தன. (தர்பார்சாஹிப் என்பது சீக்கியரின் பொற்கோயிலை (Golden Temple) குறிக்கும்) ரத்தம் தோய்ந்த வெள்ளைச் சேலையில் கைகள் உயர்த்தப்பட்ட நிலையில் இந்திரா காந்தியின் உருவம் வடிவமைக்கப்பட்டு இருந்தது. இந்தக் காட்சிகள் இணையத்தளங்கள், சமூக வலைத்தளங்களில் பரவி பெரும் சர்ச்சையை ஏற்படுத்தின. இதற்கு இந்தியாவின் காங்கிரஸ் தரப்பினர் கடுமையான எதிர்ப்பையும் அதிருப்தியையும் தெரிவித்திருந்தனர்.

இதைத் தொடர்ந்து மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர், "இதுபோன்ற நிகழ்வுகள் கனடாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுக்கு நல்லதல்ல பிரிவினை, பயங்கரவாத இயக்கங்களுக்கு இதுபோன்று இடம் தருவது என்பது மிகத் தீவிரமான பிரச்சினையாகும். வாக்கு வங்கி அரசியலுக்காக இதுபோன்ற செயல்களை ஊக்குவிப்பது ஏற்கக்கூடிய காரியம் அல்ல" எனக் கண்டனம் தெரிவித்திருந்தார். இப்படி காலிஸ்தான் ஆதரவு விவகாரம், கடந்த சில மாதங்களாகவே இந்தியாவுக்கும் கனடாவுக்கும் நீறுபூத்த நெருப்பாக புகைந்துகொண்டிருந்தது.

2021 கனடா நாட்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி, சீக்கியர்கள் கனடாவின் மக்கள்தொகையில் 2.1 சதவீதத்தைக் கொண்டுள்ளனர். மேலும், நாட்டின் வேகமாக வளர்ந்து வரும் மதக் குழுவாகவும் உள்ளனர். இந்தியாவிற்கு அடுத்தபடியாக, கனடாவில்தான் உலகில் சீக்கியர்கள் அதிகம் வசிக்கின்றனர். ஆக, கனடா நாட்டு அரசியலின் வாக்கு வங்கியைத் தீர்மானிக்கும் சக்திகளாக இந்த சீக்கியர்கள் தான் உள்ளனர். இன்னும் சொல்லப்போனால், கனடாவின் சீக்கிய மக்கள் அதிகம் வசிக்கும் இடமான பிராம்ப்டனில், 2022ஆம் ஆண்டு, நீதிக்கான சீக்கியர்கள் (SFJ) என்று அழைக்கப்படும் காலிஸ்தான் சார்பு அமைப்பு, பொது வாக்கெடுப்பு நடத்த அழைப்பு விடுத்தது. இதில், 100, 000இற்கும் அதிகமான மக்கள் காலிஸ்தானுக்கு ஆதரவாக வந்திருந்தனர் எனக் கூறப்படுகிறது.

இது தவிர, சீக்கியர்களின் எம்.பிக்கள் மற்றும் அதிகாரிகள் கனடாவின் அரசாங்கத்தின் அனைத்து மட்டங்களிலும் பணியாற்றுகிறார்கள். மேலும், அவர்களின் வளர்ந்துவரும் மக்கள்தொகை நாட்டில் மிக முக்கியமானதாகப் பார்க்கப்படுகிறது. குறிப்பாக, கனடா நாட்டு அரசியல் தலைவர்கள் சீக்கிய வாக்குகளை இழக்க விரும்பவில்லை. அதனால்தான் இதற்கு எதிராகக் குரல் கொடுக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அத்துடன், அந்நாட்டில் உள்ள அனைத்து சீக்கியர்களும் காலிஸ்தான் ஆதரவாளர்கள் அல்ல என்றும் கூறப்படுகிறது.

மேலும், புலம்பெயர்ந்த சீக்கியர்களில் பெரும்பாலானோருக்கு காலிஸ்தான் ஒரு பெரிய பிரச்சினை அல்ல என்றும் கூறப்படுகிறது.

மேலும், காலிஸ்தான் இயக்கத்திற்கு இந்தியாவில் மட்டுமே எதிர்ப்பு உள்ளது. ஆனால், கனடா, அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் பலமான ஆதரவு உள்ளது. உண்மையில், காலிஸ்தான் இயக்கம் அதன் தொடக்கத்திலிருந்தே உலகளாவிய இயக்கமாக இருந்ததாகவும், தனி சீக்கிய நாடுக்கான முதல் பிரகடனம் அமெரிக்காவில் வெளியிடப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

### யார் இந்த ஹர்தீப் சிங் நிஜ்ஜார்?

இந்தியாவில் உள்ள பஞ்சாப் மாநிலம் ஜலந்தர் அடுத்த பர்சிங் பூர் கிராமத்தை சேர்ந்த சீக்கியத் தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார். இவர் காலிஸ்தான் என்ற தனி நாடு கோரிக்கையை முன்வைத்து போராடி வந்தார். இதையொட்டி "காலிஸ்தான் டைகர் போர்ஸ்" (காலிஸ்தான் புலிப்படை)என்ற இயக்கத்தை தொடங்கினார். இந்நிலையில் தேச விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக அவர் மீது இந்திய் அரசு குற்றம்சாட்டியது. ஜலந்தரை சேர்ந்த இந்து துறவி ஒருவர் கொல்லப்பட்டதில் நிஜ்ஜாருக்கு தொடர்பிருப்பதாக புகார் எழுந்தது. இந்திய அரசைப் பொறுத்தவரைகாலிஸ்தான் புலிப் படையினர் எப்படிச் செயற்படுவது என்பது குறித்தும் நெட்வொர்க்கிங் குறித்தும் பயிற்சி அளிப்பது மற்றும் நிதி உதவி அளிப்பதில் அவர் தீவிரமாக ஈடுபட்டார் என்றும் குற்றம் சாட்டுகிறது.



இவரை தேடப்படும் ஒரு குற்றவாளியாக இந்திய தேசிய புலனாய்வு அமைப்பு (NIA) அறிவித்தது. நிஜ்ஜாரை கண்டுபிடிக்க உதவினால் 10 லட்சம் ரூபாய் சன்மானம் அளிக்கப்படும் என்று என்.ஐ.ஏ அறிவிப்பு வெளியிட்டது. இந்நிலையில் கனடாவில் குடியுரிமை பெற்று நிஜ்ஜார், அங்கேயே தஞ்சமடைந்தார். கனடாவை பொறுத்தவரை சீக்கியர்களுக்கு மிகவும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் நிஜ்ஜார் எந்தவித பிரச்சினையும் இன்றி கனடாவில் வசித்து வந்துள்ளார்.

(தொடரும்..)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தலை பிற்...

போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தேர்தலை பிற்போட்டு தேசிய மக்கள் சக்தியின் வளர்ச்சியை இடை நிறுத்த முடியும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நினைத்தார்.

இன்று வரையில் தேர்தல் ஒன்று இல்லை. இலங்கை வரலாற்றில் இவ்வாறு தேர்தல் பிற்போடப்பட்ட சம்பவங்களை கண்டு இருக்கின்றீர்களா?

ஏன் தேர்தல் நடத்தவில்லை? தேர்தல் பிரசாரத்தில் அவர்களுக்கு படு தோல்வியும் தேசிய மக்கள் சக்திக்கு மிகப்பெரிய வெற்றியும் காணப்படுகின்றது.

ஆகவே ரணில் உள்ளிட்ட தரப்பினர் சட்டங்களை மீறி நீதிமன்ற தீர்ப்புகளை உடைத்தெறிந்து தேர்தல் ஆணையகத்தை அச்சுறுத்தி தேர்தலை நடத்தவிடாமல் செய்கின்றார்கள்.

இவ்வாறு தேர்தலை பிற்போட்டுக் கொண்டிருந்தாலும் அவர்கள் நெருக்கடிக்கு உள்ளாகும் சந்தர்ப்பம் ஒன்று வரும்.

நம் நாட்டின் அரசியலமைப்பு சட்டவாக்கத்திற்கு அமைவாக ஜனாதிபதி தேர்தலை பிற்போட முடியாது.

அடுத்த வருடம் கட்டாயமாக ஜனாதிபதி தேர்தலை நடத்த வேண்டும்.

புதிய ஆட்சி ஒன்றை உருவாக்குவதற்கான தேசிய மட்ட தேர்தல் ஒன்றை விரைவில் காண்போம்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## இலங்கையின்...

சீனாவும் எப்போதும் ஒருவரையொருவர் நம்பும் மதிக்கும் சிறந்த அயல் நாடுகளாக காணப்பட்டன. ஒருவரிலிருந்து மற்றையவர் நன்மை பெறும் சிறந்த நண்பர்களாகவும் ஒருவருக்கு ஒருவர் உதவும் சிறந்த நண்பர்களாகவும் காணப்பட்டனர்.

சர்வதேச பிராந்திய உள்நாட்டு நிலைமைகள் எவ்வாறு மாற்றமடைந்தாலும் சீனா இலங்கை ஒத்துழைப்பு அனைத்து துறைகளிலும் வலுப்பெறுுள்ளதுடன் எமது நட்புறவு இரு நாட்டு மக்களின் இதயங்களிலும் ஆழமாக வேரூன்றியுள்ளது .

தற்போது இலங்கையின் சகோதர சகோதரிகள் அபிவிருத்தி தொடர்பில் தற்காலிக நெருக்கடிகளை எதிர் கொண்டுள்ளனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமர் தினேஸ் குணவர்த்தன ஆகியோரின் வலுவான தலைமைத்துவத்தின் கீழ் இலங்கையின் துணிச்சலான மக்கள் இந்த நெருக்கடிகளை வெற்றி கொள்வார்கள். இலங்கைக்கு மிகவும் சிறந்த எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுப்பார்கள்.

இலங்கை பேண்தகு அபிவிருத்தியை சாத்தியமாக்குவது வறுமை பொறியிலிருந்து விடுபடுவது அபிவிருத்தியுடன் தொடர்பற்ற பொறிகளில் இருந்து விடுபடுவது தனது சுதந்திரத்தை இறைமையை ஆள்புல ஒருமைப்பாட்டை தேசிய கௌரவத்தை பேணுவது போன்றவற்றிற்கு உதவுவதற்காக சீனா தன்னால் முடிந்த எல்லைக்குள் நின்று உதவும்.

இலங்கை சீன உறவுகளை மேலும் துரிதப்படுத்துவதில் இந்த வருடம் மிகவும் முக்கியமானதாக விளங்குகின்றது. பிரதமர் தினேஸ் குணவர்த்தன சீனாவின் யுனான் மாகாணத்திற்கு வெற்றிகரமான விஜயமொன்றை மேற் கொண்டார்.

அடுத்த மாதம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சீனாவிற்கு குறிப்பிடத்தக்க விஜயமொன்றை மேற்கொள்ள வுள்ளார்.

இரு நாட்டுத் தலைவர்களும் எட்டிய முக்கியமான ஒருமித்த கருத்தை ஆர்வத்துடன் செயல்படுத்துவதற்கும் இரு நாட்டு மக்களுக்கும் அதிக உறுதியான பலன்களைக் கொண்டு வருவதற்கும் இந்த உயர்மட்ட விஜயங்களை ஒரு வாய்ப்பாக நாம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றார். (ம-7)

## ஐ.எம்.எப்...

கும் இடையில் இன்று முக்கிய கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் விரிவான கடன் வசதியின் கீழ் இலங்கைக்கு வழங்கப்பட்ட முதல் கடன் தவணை தொடர்பான மீளாய்வு இங்கு நடத்தப்பட உள்ளது. (ம-7)

## எழுச்சி...

கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லம் முன்பாக ஆரம்பித்த தியாக தீபம் திலீபனின் 36ஆம் ஆண்டு நினைவேந்தல் எழுச்சி ஊர்தியின் இரண்டாம் நாள் பயணம் மாங்குளத்தில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லம் முன்பாக ஆரம்பித்த தியாக தீபம் திலீபனின் 36ம் ஆண்டு நினைவேந்தல் எழுச்சி ஊர்தி கொடிகாமத்தில் இருந்து முழங்காவில் வெள்ளாங்குளம் மல்லாவி ஊடாக மாங்குளம் நகரை வந்தடைந்தது.

இந்த ஊர்தி பவனியின் இரண்டாம் நாளான நேற்றுக் காலை மாங்குளம் நகரில் தியாக தீபம் திலீபனுடைய திருவுருவப்படத்திற்கு முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் சமூக செயற்பாட்டாளர் பழனியாண்டி நாகேந்திரன் ஆகியோர் மலர் மாலை அணிவித்ததை தொடர்ந்து முன்னாள் மாகாண சபை உறுப்பினர் க.சுகிர்தன் முன்னாள் கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் சி.லோகேஸ்வரன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்

அதேவேளை, மக்களின் உணர்வு பூர்வமான அஞ்சலியை தொடர்ந்து ஊர்தி பவனியானது வவுனியா நோக்கி பயணமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## ஆயு...

பணிகளில் எந்த வொரு ஆயுதங்களோ, நகைகளோ மீட்கப் படாத நிலையில் இன்று காலை 9 மணியளவில் மீண்டும் இரண்டாவது நாளாக அகழ்வுப் பணியானது இடம் பெறவுள்ளது.

புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய நீதிமன்ற அனுமதியை பெற்று நேற்றுப் பிற்பகல் 2.30 மணி முதல் மாலை 6 மணி வரை அகழ்வுப்பணி நடை பெற்றிருந்தது.

முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் பொலிஸார், விசேட அதிரடி படையினர், இராணுவத்தினர், கிராம சேவையாளர், தொல்லியல் திணைக் களத்தினர், சுகாதார பிரிவினர், தடயவியல் பொலிஸார் முன்னிலையில் குறித்த அகழ்வுப் பணி இடம்பெற்றிருந்தது. (ம-7)

## நினைவேந்தலின்...

பிரகாரம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 7.30 மணிக்கு அவரின் பிறந்த ஊரான ஊரெழுவிலிருந்து கிட்டு பூங்கா நோக்கி ஊர்திப் பேரணி ஆரம்பமாகி தொடர்ந்து காலை 8.00 மணிக்கு கிட்டு பூங்காவிலிருந்து நல்லூர் நினைவுத்தூபி நோக்கி நடைபவனி ஆரம்பமாகும்.

அதேவேளை தியாக தீபம் உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்த நேரமான 10.48க்கு அவர் உண்ணாவிரதமிருந்த நல்லூரின் வீதியிலும் நினைவுத்தூபியிலும் சமநேரத்தில் மாவீரர்களின் பெற்றோரால் ஈகசுடர் ஏற்றப்பட்டு மலர் மாலை அணிவிக்கப் படும்.

அதனைத் தொடர்ந்து மலர் வணக்கம் நடைபெறும் எனவும் அதன் பிரகாரம் இந்த நினைவேந்தலில் கட்சி பேதமின்றி அனைவரும் பங்கு கொண்டு தியாக தீபத்தினை நினைவேந்திடுமாறும் நினைவேந்தல் நிகழ்வுகளுக்காக இன்று காலை 7 மணி தொடக்கம் மதியம் 12 மணிவரை பருத்தித்துறை வீதி மூடப்படும். பயணம் செய்பவர்கள் மாற்றுவழிகளை பயன்படுத்தவும் என ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (ம-7)


மெகா பவர்
திகதி 25/09/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1596
X 11 12 15 37 50
30449

தன நிதானய
திகதி - 2023.09.25
சீட்டிழுப்பு இலக்கம் - 1278
W 28 58 64 71 W
02870

Lucky 7
திகதி 25.09.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0074
L7 இலக்கம் 0 4
வெற்றி இலக்கினம் கன்னி
வெற்றி இலக்கங்கள் 1 5 2 1 6 3

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3490
சீட்டிழுப்பு திகதி 25.09.2023
N 18 38 42 48
N 20515

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.09.25
சீட்டிழுப்பு இலக்கம் 557
விருச்சிகம் 08 17 50 62 விருச்சிகம்

மஹஜன சம்பத
திகதி 2023/09/25
சீட்டிழுப்பு இலக்கம் 5248
W 0 5 0 4 6 1

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2222 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2023.09.25 தினம் திங்கட்கிழமை
16 25 41 74 A
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 68,804,076.40
30111 274

சனிதா
திகதி 2023.09.25 வெற்றி வாரம் 4383 வர்ணம் இளம் நீலம்
06 11 21 48 J
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 58,622,196.00
52148 684

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3934 வர்ணம் மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2023.09.25 தினம் திங்கட்கிழமை
11 36 46 57 துலாம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,772,560/-
21418 432

கப்ருக
25.09.2023 வெற்றி வாரம் 1398 வர்ணம் பசுமை
V 25 27 44 53 67
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 444,322,214.20
32065 329
DLB தொலை பேசி 011-2 333 540-47 Web : www.dlb.lk

ஜயோதா
திகதி 2023.09.25 வெற்றி வாரம் 1959 வர்ணம் செம்மஞ்சள்
01 27 28 43 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 46,176,155.20
54265 330

அட கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம் : 2048
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி : 2023.09.25
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.57,117,376/-
35 39 40 68 T
40572 532


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற **SILVER SHIELD SOCKS** பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

**மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்**

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram. money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7317)

**ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்**
**303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 5392, 076 315 6470**


## 'டிசிஸ் எக்ஸ்' தொற்று WHO எச்சிரிக்கை

சமீப சில ஆண்டுகளாக எதிர்பாராத விதமாக மனித குலங்களைத் தாக்கும் பல்வேறு நோய்க் கிருமிகளின் பரவல், அடுத்ததாக வரவிருக்கும் டிசிஸ் எக்ஸ் **(Disease X)** மிகப்பெரிய ஆபத்துக்களை ஏற்படுத்துவதாக இருக்கலாம் என்று கொவிட் தொற்றுக்கு லண்டன் தடுப்பூசியைக் கண்டுபிடித்த **Taskforce** ஆய்வு நிறுவனத்தைச் சேர்ந்த கேட் பிங்ஹாம் தெரிவித்துள்ளார்.

டிசிஸ் எக்ஸ் **(Disease X)** என்பது கடந்த 2019 ஆம் ஆண்டின் இறுதியில் இருந்து உலகையே பயமுறுத்திக் கொண்டிருந்த கொவிட் 19 பெருந்தொற்றைக் காட்டிலும் மிக ஆபத்தான சர்வதேச தொற்றாக இருக்கும் வாய்ப்பு அதிகம் என்று உலக சுகாதார நிறுவனம் **(world health organization)** எச்சரிக்கிறது.(ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (17175)

**076 825 7716 (ஆகாஸ்)**

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603,**
**076 097 3127**

## VILLAGE HOTEL JAFFNA EXPRESS

பஸ் சேவை

AIRPORT PICK UP DROP SERVICE

யாழ் - கொழும்பு 2,900/=
வடமராட்சி - கொழும்பு 2,700/=



(17019)

**T.P:077 544 8503**

## வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் DHL

சகல நாடுகளுக்கான கடிதங்கள் 3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

சகல நாடுகளுக்கான பொதிகள் 5-7 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

**திருமுருகன் கொம்நெற்**
**321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.**
**0777 554 528** (17227)

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

(C-7328)

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீடித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS

**0777-068-777**

## CANADA VISA

1)Minor Education - (Age Limit - 7 to 17 years) தாய், தந்தை இருவரும் பிள்ளையுடன் பயணிக்கலாம்.
2)Visitor Visa - கனடாவில் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் உள்ளோர் விண்ணப்பிக்கலாம்.
3)Student Visa-IELTS 6.00 உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.(jan 2024)
4)Work and Study Program - Course fee after Visa மற்றும் சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

Contact : VISA Consultant,
136, Adiyapatham Road,
Thirunelvely, Jaffna. T.P : 077 038 5584 (17179)

## அலுவலக வேலை - பயிற்சி

2 மாத கால பயிற்சியுடன் உடனடி வேலைவாய்ப்பு

*நீங்கள் A/L எடுத்துவிட்டு மேற்படிப்புக்காக / வேலைக்காக காத்திருப்பவரா?
*இதோ! 2 மாத கால அலுவலக வேலையுடனான பயிற்சி நெறி
*பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும் (C-7328)



சம்பளம் - 60,000/- (2 மாதம்)

V2 TRAVELS - 0777-068-777




## அருட்குரு கடையிற் சுவாமிகளது 132ஆவது குருபூசை

**திதி புரட்டாதி மாத பூரட்டாதி நட்சத்திரம்**
**காலம் : 28.09.2023 வியாழக்கிழமை**
**காலை 9.00 மணி**

| | |
|---|---|
| அபிஷேக ஆராதனை | 9.30 மணி |
| குரு துதிப் பாடல்கள் | 11.00 மணி |
| மகேஸ்வர பூசை | 12.00 (அன்னதானம்) |

அடியவர்கள் அனைவரும் வருகை தந்து சித்தர்குருவின் அருளாசிகளைப் பெற்று சிறப்புறுக!

**கடையிற் சுவாமி சமாதி சிவாலயம்**
**கடையிற் சுவாமி வீதி,**
**நீராவியடி, யாழ்ப்பாணம்.** (17231)

## மரண அறிவித்தல்

தோற்றம் 12 - 07 - 1955



மறைவு 25 - 09 - 2023

## சுப்பிரமணியம் சீதாலட்சுமி

பொலிகண்டி ஒதியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சீதாலட்சுமி 25.09.2023 நேற்று திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற யகிதாவின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற கந்தவனம் ஆறுமுகம் இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற கனகலட்சுமி,கிருஷ்ணமூர்த்தி,மனோரஞ்சிதம்,சற்குணராசா,கைலைநாதன், சர்வேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற திருப்பதி ராசா,இராசதுரை,காலஞ்சென்ற யோகராசா,இராசலட்சுமி,நமசிவாயம், விமலாதேவி,கோணலிங்கம்,பவானி,கிரிதா,விலாசினி ஆகியோரின் அன்பு மைத்துனியும் பிரதீபா,சசிதீபா,பிரதீபன்,லுதீபா,அதீபா ஆகியோரின் பாசமிகு சித்தியும் தர்மிளாவின் அன்பு பெரிய தாயாரும் அபிராமி,குருஷோத்,குசாலினி, ஆர்ணிகன்,ஆர்த்திகன்,ஆரணியா ஆகியோரின் அன்பு மாமியாரும் டினோசா, பவிஷ்கா,பவிஷா,அனோசிகா,அபினாஷ்,அம்சிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்தில் 26.09.2023ம் திகதி இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிவரை இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் நெடியகாட்டு சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
கணவர்
மற்றும் குடும்பத்தினர்

077 136 7935
077 967 2401

(C-7326)


## வேலையாட்கள் தேவை

மல்லாகம் அளவெட்டி வீதியில் இயங்கி வரும் பலசரக்குக் கடைக்கும் அளவெட்டி பிராதான வீதியில் இயங்கும் பலசரக்குக் கடைக்கும் பெண் ஊழியர்கள் தேவை (C-7325)

**076 689 4075**
**077 464 5872**

## வேலையாட்கள் தேவை

மாவிட்டபுரத்தில் அமைந்துள்ள **K.M.V.R** ஆயுர்வேத மருந்து & பான்சி கடைக்கு வேலையாட்கள் உடன் தேவை.

**076 913 2049**
**077 292 0394** (C-7323)

K.M.V.R ஆயுர்வேத மருந்து & பான்சிக்கடை
K.K.S வீதி மாவிட்டபுரம்

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் நாவற்குழியில் 33 பரப்பு (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.**

- வீடு கட்டுவதற்கும் களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் நல்ல சூழல்.
- நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 கிலோ மீற்றர் தூரம்.
- யாழ் பஸ் நிலையம் 3 1/2 கிலோ மீற்றர் தூரம்.
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் (300,000/=)
- A-9 வீதியில் இருந்து 200 மீற்றர் தூரம்
- தரகர் தேவையில்லை
- நன்னீர் ஊற்று.

தொடர்பு
**077 623 4204**
**076 755 8606**
**077 076 0389**

(17236)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தா[illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org